கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(20.12.2020 - 20 மார்கழி 2020 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 11, கதிர் - 243, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 72 / NEWS / 2020

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

வாசகர்கள்
எழுத்தாளர்கள்
அனைவருக்கும்
கிறிஸ்து பிறப்பு பெருவிழா
மற்றும் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

## அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். (லூக் 2:10–11)



## நத்தார் சிறப்பிதழ்

குடில் ஒன்றைக் கோவிலாக்க
சர்ப்பம் தந்த பாவத்தை அன்னை மரியின்
கர்ப்பத்தால் களைந்து
மரத்தால் விளைந்த பாவத்தை வரத்தால் தீர்த்து
வார்த்தை ஒன்று மனிதனாய் வடிவெடுத்தது.

இன்று எம் மண்ணில் மனிதம் வளர்க்க
அன்று ஆட்டிடைக் காட்டில்
ஆதவன் உதித்தார்.
இன்று எம் மண்ணில் ஆதவன் அகவைக்கு
ஆரவாரம் இல்லை
அன்று வானோர், இடையர், மூவரசர்
புகழ்ந்து பாடி மகிழ்ந்தனர்

பாலக இயேசுவே, இங்கு
மீண்டும் உம் பிறப்பு – இன்று
பாமரர் நாம் ஏங்குகின்றோம் புதுவிடியல்,
புதுவசந்தம், புதுவாழ்வு தேடி
பாருலகம் கொரோனாவினால்
அடைபட்டுக் கிடக்கின்றது
பாவிகள் நாம் மகிழ்ந்திட
மாற்றுலகம் படைக்க மாட்டாயா?

பணம் படைத்தோர் இன்று நத்தார் சொப்பிங்கில்
பலர் உமது மதிப்பீடுகளை மறந்து
வணிகப் பொருளாக்கிவிட்டனர்
பாலனே, நாம் நள்ளிரவுத் திருப்பலி
இன்றித் தவிக்கின்றோம்
பட்டாசு, வான வேடிக்கை, புது உடுப்பு,
பலகாரம் ஒன்றுபட வழிசமைத்த
பண்டிகை மாறி எம்மைத் தனிமைப்படுத்தி
வைத்திட்டதே

மனிதம் மறைந்து உமது பிறப்பின்
மகத்துவம் ஊசலாடுகின்றது
மனித கொல்லியான கொரோனாவின்
அரசியல் நாடகம் களையப்பட்டு
மகிழ்ச்சியும், அமைதியும் நிலவி,
கண்ணீரும் செந்நீரும் மறைந்திட
மனிதவதாரம் கொண்ட ஆதவனே
மீட்டிடுவீர் எம்மை

ஆக்கம்.
அருட்சகோ. R. ஜோசப் ஜெயகாந்தன்.

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நத்தார் செய்தி – 2020

**கிறிஸ்மஸ் ஒரு நிறை நம்பிக்கையின் திருநாள்**

"கிறிஸ்மஸ்" என்பது இறைவன் மனித வரலாற்றில் நுழைந்த நிகழ்வான பெத்லகேமில் நடந்த இயேசுவின் பிறப்பை நினைவு கூர்தல் ஆகும். இயேசுவில் நம்பிக்கை கொள்ளவும் அவரின் பெயரில் வாழ்க்கை அனுபவம் பெறவும் கிறிஸ்மஸ் எமக்கு அழைப்பு விடுக்கின்றது (யோவான் 20:30-31) இவ்வாண்டு கொவிட் - 19 தொற்றுநோய்க்கு மத்தியில் இயேசுவின் பிறப்பை நினைவு கூறுகின்றோம் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் சோக அனுபவங்களுக்கு பின்னர் நல்லெண்ணம் கொண்ட அனைவரும் நீதிக்காக காத்திருக்கின்றோம். நம் உள்ளிருந்தும் எம்மைச் சூழவும் சுழலும் உலகளாவிய நிலையிலும் நடைபெறும் நிகழ்வுகள் ஊடாக எம்முடன் என்றும் பேசும் இறைவனின் குரலை கவனத்துடன் உய்த்தறிவோம்.

இயேசுவின் பிறப்பை நினைவுகூர்வது கடவுளின் அன்பையும் (யோவான் 3:16) மனிதத்துவத்தின் மாண்பையும் நமக்கு அறிவிக்கின்றது. இது எம்மை ஏழைகளுடன் ஒரே குடும்பமாக ஐக்கியப்படுத்துகின்றது கொவிட் - 19 காரணமாக நாம் ஒரு நம்பிக்கையற்ற சூழ்நிலையை எதிர்கொண்டாலும் கிறிஸ்மஸ் உண்மை கிறிஸ்மஸ் உணர்த்தும் நம்பிக்கையை நமக்கு தருகின்றது.

திருத்தந்தை பிரான்சிஸ் தமது கடைசித் திருமடலில் ஒவ்வொரு மனிதனும் சகல கலாசாரத்துக்கும் அப்பால் ஆன ஒரு மாற்றமுடியாத மாண்பைக்

☛ 15

மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS,
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் J.D. அந்தனி
பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

**இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா ( தி.பா 96)**




## அச்சக அறிவித்தல்

கொழும்பு கத்தோலிக்க அச்சகமானது நத்தார் விடுமுறைக்காக மார்கழி மாதம் 19ஆம் திகதி தொடக்கம் 03.01.2021 வரை மூடப்பட்டிருக்கும். மீண்டும் 2021 தை மாதம் 04ஆம் திகதி வழமைப்போல் சேவைகள் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி

**– இயக்குனர்**

# இலங்கை ஆயர் பேரவையின் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் 2019 மீதான அறிக்கை

சமீபத்தில் நிறைவுற்ற இலங்கை ஆயர் பேரவையின் அமர்வில், 250க்கும் அதிகமான அப்பாவி உயிர்களை காவு கொண்டும் பலரை குற்றுயிராகவும் மற்றும் பலரை பலத்த காயப்படுத்தியும் நின்ற ஈஸ்டர் தாக்குதல் முக்கிய கவனம் எடுத்து ஆராயப்பட்டது இத்தாக்குதல் நடைபெற்று 20 மாதங்கள் கடந்த நிலையிலும் இதற்குப் பொறுப்பானவர்களும் சூத்தி-ரதாரிகளும் இன்னும் சட்டத்தின் முன் கொண்டு-வரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் பற்றிய அனைத்து தகவல்களும் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளது என்பதை ஊடகங்கள் மூலம் புரிந்து கொள்கின்றோம். மனிதகுலத்திற்கு எதிரான இந்தக் கொடூரமான பயங்கர தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க கூடிய வகையில் விசாரணைகள் ஒரு முடிவுக்கு வர வேண்டிய நேரம் இது.

உயிரை இழந்த அனைவருக்கும் மற்றும் மிருகத்தனமான தாக்குதலால் ஏற்பட்ட உடல் மற்றும் உளவியல் ரீதியான காயங்களால் எதிர்காலம் சிதைக்கப்பட்ட பலருக்கும் இது நீதிகோரும் முழுமை-யான தேவையாகும். குற்றவாளிகள் நாட்டின் பாதுகாப்பையும் இனம் மதம் ஆகியவற்றினை கரு-தாத மக்களின் விலைமதிப்பற்ற உயிர்களின் பாது-காப்பையும் கருத்தில் கொண்டு சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும். குற்றவாளிகளும், அவர்களுக்கு உதவியாளர்களும் உதவியவர்களும், உடந்தையாக இருந்தவர்களும் தண்டிக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் கத்தோலிக்கர்கள், பிற மதத்தினர் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக மோசமான தாக்குதல்கள் தவிர்க்க முடியாததாகி விடும் இத்த-கைய கொடிய குற்றங்களுக்கு உரியவர்கள் மீது விரைவாக நீதி நடவடிக்கைகள் மேற்கொண்டால் அன்றி சாத்தியமான எதிர்கால தாக்குதல்கள் பற்றி மக்களின் மனதில் அச்சமும் பதட்டமும் நிலைகொ-ண்டிருக்கும். நாட்டின் எதிர்கால நலனுக்காக நீதியான விசாரணை நடைபெறுவதானது எந்த சிறு வேறுபாடுகளும், கட்சி அரசியல் மற்றும் சொந்த நலங்களில் பொருட்டும் தடைப்பட்டு போகக் கூடாது என்பதே எங்கள் உருக்கமான வேண்டுகோளாகும். மாறாக நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கமும் நீதித்துறை செயல்முறை களும், சட்டத்தை செயற்படுத்தும் அதிகாரிகளும் மற்றும் பொறுப்புள்ள ஒவ்வொரு நபரும் கொண்டிருக்க வேண்டிய விருப்பாகும். இலங்கை விலைமதிப்பற்ற பண்பாட்டுப் பாரம்பரியத்தை கொண்டுள்ள ஒரு நாடாகும். எதிர்காலத் தலைமுறைக்காக, நமது நாட்டையும் பண்பாட்டையும் மக்களையும் பாதுகாத்து அமைதியையும் ஒற்றுமையையும் செழிப்பையும் உறுதிப்படுத்துவது எமது கடமையாகும்.

**மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS,**
**தலைவர்**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**

**மேதகு ஆயர் J.D. அந்தனி**
**பிரதம செயலாளர்**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**

# பொன்விழாக் காணும் சிம்மக் குரலோன்
## அருட்பணி. அகஸ்ரின் நீக்கலஸ் பெர்னாண்டோ

இறைவனின் அழைப்பு என்பது எல்லோருக்கும் கிட்டும் பாக்கியம் அல்ல. இறை சித்தத்தை நிறைவேற்ற பொருத்தமானவர்களுக்கே இறைவன் அழைப்பு விடுகின்றார். இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் சேவை செய்ய அழைக்கப்பட்ட அருட்பணி. அகஸ்ரின் நீக்கலஸ் பெர்னாண்டோ இன்று 19.12.2020 தனது குருத்துவப் பொன்விழாவைக் கொண்டாடுகின்றார். இவ்வேளையில் அவரின் பணி தொடரவும் தொடர்ந்தும் சுகதேகியாக, மகிழ்வோடு வாழவும் கொழும்பு உயர்மறைமாவட்ட இறைமக்களோடு இணைந்து எமது செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் புளங்காகிதம் அடைகின்றோம்.

### நடந்து வந்த பாதை

எமது பொன்விழா நாயகர் நீர்கொழும்பு முன்னக்கரையில் திருமதி. மேரி திரேஸ் பெர்னாண்டோ, திரு. ஜோர்ஜ் லியோனிஸ் பெர்னாண்டோவுக்கு மூத்த 1943ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி அவதரித்தார். சிறுவயது முதலே இறைபக்தியும், துடிதுடிப்பும் கொண்ட இவர் தனது கல்வியை முன்னக்கரை புனித மரியாள் பாடசாலையில் கற்றார். அங்கிருந்து இறை அழைத்தல் பெற்று ஆரம்ப குருமடப் பயிற்சியைப் பெறுவதற்காக பொரளை தூ ய அலோசியஸ் சிறிய குருமடத்திற்குச் சென்று கல்வி பயின்றார். அங்கிருந்து தனது 20வது வயதில் 1963ம் ஆண்டு கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்திற்குச் சென்றார்.

அங்கு குருவுக்குரிய அனைத்து பயிற்சிகளையும் பூரணமாகப் பெற்று 1970ம் ஆண்டில் 27 வயது நிரம்பிய இவர் அன்றைய கொழும்பு உயர்மறைமாட்ட ஆயராக இருந்த அதிமேதகு தோமஸ் கர்தினால் கூரே ஆண்டகையினால் தூய லூசியாள் பேராலயத்தில் மார்கழி மாதம் 19ம் திகதி அருட்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் நீர்கொழும்பு கடற்கரைத்தெரு தூய செபஸ்தியார் ஆலயப் பங்கிலும், கொம்பனித்தெரு தூய செபமாலை அன்னை ஆலயப் பங்கிலும் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றி தலைமைத்துவம் தாங்கும் திடத்தைப் பெற்று நீர்கொழும்பு கடற்கரைத்தெரு தூய செபஸ்தியார் ஆலயப்பங்கிற்கு பங்குத்தந்தையாக நியமனம் பெற்-றார். அதனைத் தொடர்ந்து தெமட்டகொடை தூய அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தையாகவும் பின்-னர் கொழும்பு செக்கடித்தெரு தூய அன்னம்மாள் ஆலயப் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார். 1982ம் ஆண்டு தொடக்கம் 1992ம் ஆண்டு வரை அவர் செக்கடித்தெ பங்கில் ஆற்றய பணி இன்றும் பலராலும் பேசப்பட்டு வருவதை நாம் அறியலாம். தொடர்ந்து நீர்கொழும்பு மணற்சேனை தூய கைத்தான் ஆலய பங்குத்தந்தையாகப் பணியாற்றி கொட்டாஞ்சேனை தூய லூசியாள் பேராலய உதவிப்பங்குத்தந்தையாக பணியாற்றினார். பின்னர் கொம்பனித்தெரு தூய செபமாலை அன்னை ஆலயப் பங்குத்தந்தையாகவும், புதுக்கடை தூய செபஸ்தியார் ஆலயப் பங்குத்தந்தை-யாகவும் இறுதியாக கொள்ளுப்பிட்டி தூய அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தையாகவும் பணியாற்றி 2018ம் ஆண்டு குருத்துவ நிர்வாகப் பணியில் இருந்து ஓய்வு-பெற்றார். தன்னுடைய பணிக்காலத்தில் மறைக்கல்வியின் தமிழ்ப்பிரிவுப் பொறுப்பாளராகவும் ஆயரின் பிரதிநிதியாக (கொழும்பு வாழ் தமிழ் மக்களின்)வும் சிறப்பாகப் பணியாற்றினார் எனலாம். இவர் தன்னுடைய உயர் கல்வியை பிலிப்பைன்ஸ் நாட்டிலும், அமெரிக்காவிலும் கற்றார்.

### அவரின் ஆன்மீகம்

உதவிப்பங்குத்தந்தையாக, பங்குத்தந்தையாக, ஆயரின் பிரதிநிதியாக ஏன் தற்போது ஓய்வுபெற்ற நிலையிலும் கூட மறைமாவட்டத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து மக்களை நெறிப்படுத்திச் செல்வது மட்டுமல்ல தானும் அத்தகைய ஆன்மீக நிகழ்வுகளில் முன்னின்று பங்கு பற்றி முன்மாதிரியாக விளங்குவார். தமிழ் மக்களின் விடுதலைக்கு இயேசுவே வழி அமைக்க முடியும் என்று முதிர்ச்சி நிறை ஞானத்தோடு செபம், உபவாசம் என்பனவற்றை எப்போதும் வலியுறுத்தி வந்தார். அத்தோடு நின்றுவிடாமல் சம்பந்தப்பட்டோருக்கு சொல்ல வேண்டியதை உரிய நேரத்தில் துணிச்சலோடு கூறுவது இவரது இறைவாக்குப் பணியின் இமயச் சிகரம் எனலாம். தான் தலைமை தாங்கும் வழிபாட்டிலும் திருப்பலியிலும் சிம்மக் குரலோடு இறைவார்த்தையை எடுத்துக்கூறி, பாடல்கள் பாடி, நித்திரை கொள்ளும் குழந்தையைக் கூட வழிபாட்டில் அர்த்தமுள்ள முறை-யில் பங்கெடுக்கச் செய்யும் சாதுர்யம் அவருக்கே உரித்தானது எனலாம்.

### குருக்களுடனான உறவு :

"நல்ல ஆயன் தன் ஆடுகளை அறிவான்" பொன்விழா நாயகரும் ஒவ்வொரு குருக்களின் ஆளுமை பற்றியும் ஆழமான தனிப்பட்ட அறிவு கொண்டவர் என்பது தெளிவு, ஒவ்வொரு குருவின் குணவியல்புக்கேற்ப அவர்களோடு நடந்து கொள்வார். கனிவாக நடந்து கொள்ள வேண்டியவர்களோடு கனிவாகவும், கண்டி-ப்பாக நடந்து கொள்ள வேண்டியவர்களுடன் கண்டிப்-பாகவும் நடந்து கொள்வார். மனம் சோர்ந்த குருவுக்கு பரிவும், வழிதவறிச் செல்வோர் மட்டில் பொறுமை காட்டி திருந்தி வாழப் போதிய அவகாசம் கொடுக்கும் பொறுமை நிறைந்த அன்பும், ஆழமான புரிந்துணர்வும் காட்டுபவர். பலவீனத்தில் தடுமாறிய பேதுருவை தலைவனாக உருவாக்கிய ஆண்டவர் இயேசுவைப் போல பெருந்தன்மையோடு இவர் நடந்து கொள்வதால் இவர் பங்குத்தந்தையாக பதவி வகித்த எல்லாப் பங்குகளிலும், குருக்களை இன்முகத்தோடு வரவேற்று, உணவளித்து, தங்குமிட வசதி செய்து கொடுத்து தன்னோடு சில காலம் தங்க அனுமதியும் கொடுத்து அரவணைத்துள்ளார்.

### தாழ்ச்சியோடுபணிபுரியும்அருட்பணி–யாளர்.

தாழ்ச்சி என்னும் பண்பினை அப்பட்டமாக வெளிப்படுத்தும் எளிமையும், ஏழ்மையையும் எமது பொன்விழா நாயகரின் வாழ்வில் வெளிப்படையாக காணலாம். பல்வேறு சௌகரியங்களோடு பகட்டான,



ஆடம்பரமான ஒரு வாழ்வை வாழக்கூடிய சந்தர்ப்-பங்கள் இருந்தும் மிகவும் எளிமையான ஒரு வாழ்வை அவர் தேர்ந்து கொண்டதுமன்றி தனக்கு கீழ் பணியாற்றும் குருக்களுக்கும் துறவிகளுக்கும் ஒரு சிறந்த முன்னுதாரணமாக விளங்குகின்றார். இவரின் தாழ்ச்சியும், எளிமையும் அவரது வாழ்க்கை முறைகளி மட்டுமன்றி அவருடைய இறைவார்த்தைப் பணியிலும் இறைமக்களுடனான தொடர்பிலும் வெளிப்பட்டு நிற்பதை நாம் அவதானிக்கலாம். நற்செய்திப் போதனையிலே எல்லோரையும் கவரும் வண்ணம் இலகுவான எளிய நடையிலே ஆழமான கருத்துக்களை அள்ளித்தருவதோடு சுருக்கமாக குறுகிய நேரத்திலே மறையுரையை முடித்துக்கொள்வார். தன்னைத் தேடி-வரும் மக்களை வரவேற்றுப் பொறுமையுடன் அவர்கள் பிரச்சினைகளைச் செவிமடுத்து, தகுந்த பதிலளித்து மக்கள் திருப்தியோடு இல்லம் செல்ல உகந்த முறையிலே வழிநடத்தும் ஞானம் உள்ளவர் இவர் என்றால் அதுமிகையாகாது.

தன் பன்முக ஆளுமையில் பல்வேறு விலையுயர்ந்த மாணிக்கங்களையும், முத்துக்களையும் கொண்ட நம் அருட்பணியாளர் தொடர்ந்தும் உடல்-உள, ஆன்மீக சுகத்தோடு வாழ்ந்து பணியாற்ற செபிப்போம், பொன்விழா வாழ்த்துக்களை தெரிவிப்போம்.

**கண்ணியம் தவறிடாமல் மந்தையை**
**வழிநடத்தும் ஆயனாய்**
**கருத்துடன் எதையும் செய்து கனிவுடன் வழிநடத்தும்**
**பொன்விழா நாயகரே!**
**எண்ணியே ஆய்ந்து பார்த்து எழுபத்தேழு அகவையிலும்**
**எழுகதிராய் சுடர்பவரே!**
**திண்ணிய நெஞ்சத்தோடு திடமுடன் கடமை செய்தீர்**
**உயர்மறைமாவட்டத்தின் மூத்த குருக்களில் ஒருவராய்**
**முன்னக்கரை மண் மகிழ்ந்திட அருட்பணியாளரானீர்**
**கண்ணின் கருவிழிபோல் பங்கினைக் காத்து வந்தீர்**
**பணியிலே ஓய்வு பெற்றாலும் சிம்மக்குரலோயாது**
**தன்னிகரில்லா உந்தன் ஐம்பது ஆண்டுப்**
**பணியினை எண்ணி**
**பொன்னாளாம் இந்தப் பொன்விழா நன்நாளில்**
**பூக்களால் புகழ்பாக்கள் நாம் பாடுகின்றோம்**
**இறைத்துணையோடு வாழிய நீர் பல்லாண்டு**

**ஆக்கம் அருட்சகோதரர். R. ஜோசப் ஜெயகாந்தன்.**

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : **cgnanaoli@yahoo.com**
இணையத்தளம் : **www.colomboarchdiocesancatholicpress.com**
20 மார்கழி, 2020 ஞாயிற்றுக்கிழமை.

# “நாமும் இயேசுவைப் போன்று ஏழை எளியவர்களைத் தேடிச் செல்வோம்”.

**பூவுலகத்து மாந்தர்களே,**
**புன்னகையோடு வாழுங்கள்**
**புதுவாழ்வு அளித்திட**
**புதுநாயகன் வருகின்றான்.**
**இதய வேள்வியில் இனிமையை நிரப்பிட**
**உறவை மேன்மைப்படுத்திட வாருங்கள்**
**உண்மையை நேசித்த இறை உறவை**
**வரவேற்றிட உரிமையோடு வாருங்கள்**

மார்கழி மாதத்தின் மிக முக்கியத் திருவிழாவாக இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாடுகிறோம். கண்ணுக்குப் புலப்படாதக் கடவுளின் அன்பை, நாம் தொட்டு உணர்ந்து இரசிக்கும் வண்ணமாக இயேசு இவ்வுலகில் உதித்தார். கடவுளின் வாக்கு என்பது அவரது பெயர் (திருவெளிப்பாடு 19:13). “வாக்கு மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்” (யோவான் 1:14).

இப்படிப் பிறந்தவர் தாம் நமக்கு நிலைவாழ்வும், மீட்பும் கொடுக்கும் பேரரசர்! இவர், திரும்பி இரண்டாம் முறை இவ்வுலகில் வெற்றி வாகைச் சூடி வரும்பொழுது அரசர்க்கெல்லாம் அரசர், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர் என்ற பெயர் அவருடைய ஆடையிலும், தொடையிலும் எழுதப்பட்டிருந்தது (திருவெளிப்பாடு 19:16).

இத்தகைய அரசர் பிறந்த நிகழ்வை ஒவ்வோர் ஆண்டும் கோலாகலமாகக் கொண்டாடுகிறோம். ஆனால் இந்த வருடம் சற்று வித்தியாசமான சூழ்நிலை காணப்படுகின்றது. மக்கள் கொரோனா கொள்ளை நோயினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலே உள்ளனர். இயேசு ஏழை எளியவர்களைத் தேடி வந்தார். நாமும் இயேசுவைப் போன்று ஏழை எளியவர்களைத் தேடிச் செல்வோம். அவர்களுக்கு நம்மாலான உதவிகளைப் புரிவோம். தேவையற்ற ஆடம்பரங்களை களைந்து, தேவையில் இருப்பவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி, இயேசுவை நம் இதயத்தில் மீண்டும் பிறக்கும் வண்ணம் நடந்துகொள்வோம்.

ஆம், நமக்காகத் தம் உயிரையே கொடுத்த இயேசுவின் பாதையில் நடப்பவர்தான் அவரது உண்மையான சீடர். அவரை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால், தம் அயலவர்களில் அவரை நாம் வரவேற்க வேண்டும். இறைவனுக்குப் பணிபுரிவது எளிது. ஆனால், இயேசு இன்று உயிருள்ள இறைவனாக, ஏழை எளிய மக்கள் மத்தியில் சிறந்த முறையில் குடிகொண்டிருக்கிறார். வாழ்கின்றார்.

“என் சீடன் என்பதற்காக இச்சிறுவருள் ஒருவனுக்கு ஒரே ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவனும் கைமாறு பெறாமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” (மத் 10:42).

இதைக் கடைப்பிடித்தால்தான் நாம் அர்த்தமுள்ள கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாட முடியும். அனைவருக்கும் எனது அன்பும், பாசமும், மன்றாட்டும் கலந்த கிறிஸ்துப் பிறப்பு விழா நல்வாழ்த்துகள்!

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**




# துயர் நிறைந்த எம் சமுதாயத்தில் கிறிஸ்து பிறப்பு



சகோ. C. J. ஐதுஸ்ராஸ், இறையியல் 2ம் வருடம், தேசிய குருமடம், கண்டி.

பொதுவாகக் கிறிஸ்து பிறப்பு அல்லது கிறிஸ்மஸ் என்று சொன்னாலே எம் அனைவரது மனதிற்குள்ளும் ஓர் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும். இவ்வாறான மகிழ்ச்சியின் காலத்தில் தான் இறைவனின் நற்செய்தி எமக்குக் கிறிஸ்து வழியாக அருளப்படுகின்றது. “வார்த்தையான இறைவன் மனுவுருவாகி, நம்மிடையே குடிகொண்டார்” எனும் இறைவார்த்தையின் மறைபொருளை அறியவும், இறைவனை இம்மானுவேலாக, நம்மோடு இருக்கும் கடவுளாக கண்டுணரவும் இக்காலத்தில் அழைக்கப்படுகிறோம். இவ்வாறு மனிதர் அனைவருக்கும் மீட்பருள இறைவன் மனிதனாக எம்மிடையே இயேசு கிறிஸ்து வழியாக வந்ததை நாம் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கின்றோம்.

இன்றைய காலத்தில் எமது சமுதாயத்தின் நிலைமையைச் சற்று நோக்குகையில், மக்கள் பலரும் சீரற்றதும், துயர்நிறைந்ததுமான, வாழ்வையே எதிர்நோக்கி உள்ளனர். நாடு முழுவதும் பரவிக் காணப்படும் கோவிட் - 19 கொள்ளை நோயின் தாக்கமும், நாட்டின் பல பிராந்தியங்களில் “புரவி” புயலால் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்களின் வடுக்களும், எமது வாழ்வியலை சீர்குலைத்து துன்பகரமானதாக மாற்றியுள்ளது. இந்த கோவிட் - 19 கொள்ளை நோயோ, புரவி புயலோ பல், இன, மத மொழியினர் வாழும் இந்த நாட்டில் எவ்வித பாரபட்சமுமின்றி அனைவரையும் தாக்கி, எம் சமுதாயத்தில் சீரற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. மனிதர் எம்மிடையே எவ்வாறான பிளவுகள் காணப்பட்டாலும், இவ் இயற்கை சீற்றத்திற்கு முன்னால் நாம் யாவரும் சமமாகவே காணப்படுகின்றோம். இவ்வாறான இடர் நிறைந்த எமது இன்றைய சமுதாயத்தில், எம் மக்கள் படும் வேதனைகள் மற்றும் துன்ப துயரங்கள் எண்ணிலடங்காதவையாகவே உள்ளன.

இச் சவால்மிக்க எம் இன்றைய சமுதாயத்தில் மக்கள் படும் துயர்மிகு வேதனைகளின் நடுவில், கிறிஸ்து பிறப்பு பற்றி நாம் சிந்திக்கையில், எமது எண்ணங்கள் பல்வேறுபட்ட வியப்பான கண்ணோட்டத்துடன் காணப்படுகின்றன. மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்துபிறப்பு, துன்பம் நிறைந்த எம் வாழ்வில் எவ்வாறான மாற்றத்தைக் கொண்டுவரும் என்ற எதிர்பார்ப்பில் எமது எண்ணங்கள் அலைமோதிக் காணப்படுகின்றன. எனினும், இற்றைக்கு ஏறத்தாள இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த வரலாற்று கிறிஸ்து பிறப்பு நிகழ்வினை, நாம் இன்றைய கண்ணோட்டத்தில் நோக்குகையில், அது எமக்குப் புதுவித ஆற்றலையும், இறைவனின் பராமரிப்பையும், அவரது உடனிருப்பையும் உணர்த்தி, அதற்கு எமது பதிலையும் எதிர்பார்த்துக் காணப்படுகின்றது.

கிறிஸ்து பிறப்பை நாம் விவிலியக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் நோக்குகையில், மீட்பர் இயேசுவின் பிறப்பானது துன்பமும், துயரமும் நிறைந்த அக்கால மக்களின் வாழ்க்கைப் பின்னணியில் நிகழ்ந்ததைக் காணமுடியும். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் தம் சொந்த நாட்டிலேயே உரோமைய அரசாட்சியின் கீழ் இருந்தனர். தாவீதின் வழிமரபில் உதித்த பாலகன் இயேசுவின் பிறப்பையொட்டிய நிகழ்வுளின்...

15

## உண்மை உறைக்கும்






# உலகின் மடைமை இறைவனின் ஞானம்.

ஆக்கம்: அருட்பணி.
அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி

வழமையும் விமரிசையாக, ஆடம்பரமாக, அசத்தலாக கொண்டாடும் கிறிஸ்துவின் பிறப்பு விழாவை இம்முறை எளிமையாக ஆர்ப்பாட்டம் ஆரவாரம் இல்லாமல் வானவேடிக்கை கேளிக்கைகள் இல்லாமல் கொண்டாட வேண்டிய ஓர் சூழல். எம் உயிரையும் பிறர் உயிரையும் பாதுகாக்க இப்படி ஓர் ஏற்பாடு. அப்படித்தானே. ஒரு கனம் இயேசு பிறந்த காலக்கட்டத்தை நினைத்துப் பார்க்கின்றேன். ஆரவாரம் இருந்திருக்கும் ஏனென்றால் கணக்கெடுப்பு நேரம் அது. ஆனால் ஆரவாரம், விமரிசை, வான வேடிக்கை என்று எதுவுமே இருந்திராது. இயேசு பிறந்திருக்கின்றார். இது ஓர் சிறப்பு, விசேட குழந்தை என்று கூட அறிந்திருக்க நியாயமுமில்லை, அவசியமுமில்லை. இடையர்கள் மாத்திரமே அந்த பாக்கியம் பெற்றவர்கள் ஆனார்கள். வலிமையானதை, ஆற்றல் நிறைந்ததை தேர்ந்தெடுப்பது மனித இயல்பு, இறைவன் இதற்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் செயல்படுவதைக் காண்கின்றோம்.

இன்றைய உலகம் ஆதிக்கத்திற்காக அலைகின்றது. வல்லமையானதை தேடி அதை தனக்குரியதாக்க வீராப்புடன் முனைவதை இன்றும் கண்கூடாகக் காண்கின்றோம். இவ்வருடமே உலகையே ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் முன்னிலையில் வல்லரசு நாடுகள் நிலைதடுமாறியுள்ளன. நாங்கள் தான் உலகில் அதிசிறந்த வல்லரசு நாடு என்று மார்பு தட்டிய பல நாடுகளில் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்டு விட்டன. சாதாரண மக்கள் மாத்திரமல்ல, குருக்கள், துறவியர், வைத்தியர்கள், தாதிமார் எனப் பலதரப்பட்ட நிலையிலுள்ளோரை பதம் பார்த்துள்ளது. பார்வைக்கு புலப்படாத வைரஸ் கிருமி, வலிமைக்காகவும், பலத்திற்காகவும் போட்டி போடும் இவ்வுலகில் பலவீனமானவர்கள் பந்தாடப்படுகிறார்கள். சிறுபான்மையினர் சிதைக்கப்படுகிறார்கள். மொத்தத்தில் மனிதம் சிதைக்கப்படுகிறது.

இச்சூழமைவின் பின்புலத்தில் தான் இம்முறை கிறிஸ்து பிறப்பை கொண்டாடுகின்றோம். இத்தருணத்தில் நம் திருத்தந்தை பிரான்சிஸ் தனது பெயர் கொண்ட புனிதரின் திருநாளுக்கு முன்தினம் ஐப்பசி 3ம் திகதி புதியதொரு திருமடலை அசிசி நகரில் வெளியிட்டார். இதன் பெயர் "அனைவரும் உடன்பிறந்தோர்" இது சகோதரத்துவம் மற்றும் சமூக நட்பை பற்றி ஆழமாக பேசுகின்றது. இது ஓர் சமூகத் திருமடல். இதில் திருத்தந்தை தரும் செய்திகளை தியானித்து வாழபயிற்சி பெற கிறிஸ்து நமக்கு துணைபுரிவாராக இத்திருமடலை 5 கோணங்களில் பார்க்க முனைகிறேன்.

### 1. நல்ல சமாரியர் :-

இவ்வுவமை எம் எல்லோர்க்கும் நன்கு பரிச்சயமானது. இவ்வுலகில் இன்று தாண்டவமாடும் "அக்கறையற்ற தன்மை" பற்றி பேசுகின்றார். மற்றவர்களிடம் இருந்து எம்மை பிரித்து நாம் மட்டும் வாழ வேண்டுமென நினைத்து செயல்படுகின்றோம். இன்று காயப்பட்டு, துன்புறும் மனிதர்களுக்கு சகமனிதர்கள் நல்ல சமாரியரைப் போன்று மற்றவர்கள் மட்டில் அக்கறை கொண்டு வாழ அழைக்கின்றார். இதற்கு ஒவ்வொரு மனிதரிடமும் கருணை உள்ளம் வேண்டும். தேவையில் உள்ளவர்களுக்கு நாம் அயலவர்களாக மாறவேண்டும். தேவையில் உள்ளவர்கள் மட்டில் என் மனம் கசியாவிடில் என் நெஞ்சில் ஈரம் இல்லையெனில் அது தவறானது. ஒவ்வொரு மனிதனும் மாண்புடன் வாழ உரிமையுடையவன் "யாரும் தனிமையில் வாழ்க்கை பயணத்தை மேற்கொள்ள முடியாது. ஓர் மனித குடும்பமாக கனவு காண வேண்டிய நேரமிது. மேலும் ஒவ்வொருவரிலும் கிறிஸ்துவை காண அழைக்கப்படுகிறோம்".

### 2. அபிவிருத்திக்கான வழிமுறை :-

உலகப் பொருளாதாரம் மனிதனை மையமாக கொண்டதாக இருக்கவேண்டும். இன்று பணம், செல்வம் ஆட்சி செய்கிறது. மனித தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. இது சாத்தானின் செயல்பாடு. வியாபாரம் உச்ச இலாபம் போன்ற வழிமுறைகளினால் தொழிலாளர்கள் சுரண்டப்படுகிறார்கள். இந்நிலை மாறவேண்டும். நாம் வியாபாரிகளாக இருக்கின்றோமா? எவ்வாறு எம் தொழில்களை கையாள்கின்றோம்? அவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுக்கப்படுகின்றனவா? தொழிலாளர்களாக எம் உழைப்பை நீதியோடு செய்கின்றோமா? (தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூபாய் ஆயிரம் கொடுக்க வக்கில்லா ஓர் நாடு இது)

### 3. புலம்பெயர்வு :-

இன்று இனவெறியால் உள்நாட்டுப்போர் போன்ற காரணிகளால் எத்தனையோ குடும்பங்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். எம் நாட்டிலேயே எத்தனையோ இடப்பெயர்வுகளை சந்தித்த மக்கள் பல்லாயிரக்கணக்கானோர் உள்ளனர். இதனால் உறவுகளை தொலைத்து, உடைமைகளை இழந்து வாழ்வோர் ஏராளம். எனவே தாம் பிறந்த மண்ணில் மாண்புடன் வாழ உறுதியான வாய்ப்புக்களை வழங்க வேண்டும். இதனால் தேவையற்ற இடப்பெயர்வு தவிர்க்கப்படமுடியும். அதேவேளை தாம் பிறந்த மண்ணை விட்டு வேறு நாடுகளில் புகலிடம் கோருவோரின் உரிமைகளை மதித்து அவர்களை வரவேற்க வேண்டும். அவர்கள் பாதுகாப்புடன் வாழ ஆவண செய்ய வேண்டும்.

### 4. அரசியல் :-


மனித மாண்பை மையமாகக் கொண்டது ஓர் சிறந்த அரசியல். போர் உலகை சீரழியச் செய்கிறது. அணு ஆயுதங்கள், குண்டுகள் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. இன்று போர் ஆயுதங்கள், அணுகுண்டுகள் போன்றவற்றிற்காக செலவிடப்படும் பணத்தை உலக பட்டினியை போக்க செலவிடுமாறு உலக நாடுகளுக்கு அழைப்பு விடுக்கின்றார். பல்லாயிரக்கணக்கான குழந்தைகள், குடும்பங்கள் இன்று பசி, பட்டினியால் எழுப்பும் கூக்குரல்கள் விண்ணகத்தை எட்டியுள்ளன. மேலும் மரண தண்டனை எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது அல்ல என்று திருத்தந்தை வலியுறுத்துகின்றார்.

### 5. சமூகத்தில் உரையாடல் மற்றும் நட்பு :-

மனிதன் ஓர் சமூகப் பிராணி. வாழ்வு என்பது மற்றவருடனான சந்திப்பின் கலையாகும். இந்த உலகில் யாரும் பயனற்றவர்கள் அல்ல. "அமைதி ஏற்படுத்துவோர், கடவுளின் மக்கள் எனப்படுவர்" நாம் ஒருவர் ஒருவரோடு கைகோர்க்க வேண்டும். மற்றவர்களில் இருக்கும் நல்லவைகளைக் காண அழைக்கின்றார். பிரிவினைகள், இனவாதங்கள் போன்றனவற்றை சமூக வலையமைப்பினூடாக பரப்புவோரை எச்சரிக்கின்றார். எம் ஒவ்வொருவரிலும் புதைந்து கிடக்கும் இறைசாயலை இனங்கான அழைப்பு விடுக்கிறார்.

ஈற்றில் திருத்தந்தை கூறியவாறு நாம் வாழ்ந்தால் அது இவ்வுலகிற்கு மடைமையாக இருக்கும். கிறிஸ்துவின் சீடராக வாழ்வது உலகிற்கு மடைமையே! அதுவே கிறிஸ்துவின் வழி. வெறுமனே கிறிஸ்துவின் பிறப்பின் காரணங்களை புரிந்து கொண்டு, அவர் ஆரம்பித்த இறையாட்சி பயணத்தில் பங்காளிகளாவோம். இம்முறை கிறிஸ்மஸ் எங்கள் வாழ்வில் வேரோட்டமான மாற்றங்களை கொண்டு வர எம்மையே அவரிடம் கையளிப்போம். ஆடம்பரங்களை, வானவேடிக்கைகளை முற்றாக தவிர்ப்போம். எம்மைச் சூழ உள்ள எளியோர்க்கு, நலிந்தோர்க்கு நல்ல சமாரியராய் மாறுவோம்.

> "கிறிஸ்துவின் சீடராக வாழ்வது உலகிற்கு மடைமையே! அதுவே கிறிஸ்துவின் வழி. வெறுமனே கிறிஸ்துவின் பிறப்பின் காரணங்களை புரிந்து கொண்டு, அவர் ஆரம்பித்த இறையாட்சி பயணத்தில் பங்காளிகளாவோம்."







### திருத்தந்தையின் கருத்துகள்....

**பலர் துன்பங்களை எதிர்கொள்ளும் இந்நாள்களில், கிறிஸ்மஸ் பெருவிழாவை நோக்கிய நம் பயணத்தில், இயேசுவின் அன்னையின் துணையோடு, இறைமகன் தனது வருகையால் இவ்வுலகிற்குக் கொணர்ந்த மிகப்பெரும் நம்பிக்கை மற்றும், மகிழ்வை மீண்டும் கண்டுணர முயற்சி எடுப்போம் என்று கூறியுள்ளார்.**

☆☆☆☆

**எந்த ஒரு கொள்ளைநோயோ, அல்லது, நெருக்கடியோ, கிறிஸ்து பிறப்பின் ஒளியை மறைத்து விடமுடியாது, ஆகவே, அந்த ஒளி நம் இதயங்களுக்குள் புகவும், உதவித்தேவைப்படுவோரை அனுகவும் அனுமதிப்போமாக**








# உலகிற்கு ஒளியாக மெசியா பிறந்துள்ளார்.

ஆக்கம்.
அருட்சகோ. R. ஜோசப் ஜெயகாந்தன்.

## (திருவருகைக் காலம் முதல் கிறிஸ்து பிறப்பு வரை)

**காத்திருப்பது என்பது வாழ்க்கையில்**
**தவிர்க்க முடியாததாகி விடுகின்றதல்லவா?**
**நிலம் மழைக்காக காத்திருக்கின்றது**
**மார்கழி குளிர்பனிக்காக காத்திருக்கின்றது**
**இரவு பகலுக்காக காத்திருக்கின்றது**
**பகல் இரவுக்காக காத்திருக்கின்றது**
**காற்று தன் வேகத்தைக் காட்ட**
**புயலுக்காகக் காத்திருக்கின்றது**
**ஒரு மீன் ஓட உறுமீன் வருமளவும்**
**காத்திருக்குமாம் கொக்கு,**
**குளத்திலே ஒற்றைக் காலில் நிற்கும்**
**கொக்கு மீனுக்காக காத்திருக்கின்றது**
**மாணவன் பரீட்சைக்காகக்**
**காத்திருக்கின்றான்**
**படித்து பட்டம் பெற்றவர்கள்**
**வேலைக்காக காத்திருக்கின்றனர்**
**உழைத்தவர் ஓய்வுக்காகக்**
**காத்திருக்கின்றனர்**
**வாழ்க்கை மரணத்திற்காகக் காத்திருக்கின்றது**
**மரணம் வாழ்க்கைக்காக காத்திருக்கின்றது**

இக்காத்திருப்பின் காலத்தில் கிறிஸ்துவின் மக்களாகிய நாம் இயேசுவின் வருகைக்காகக் காத்திருக்கின்றோம். யாருக்காகக் காத்திருக்கின்றோம்? எதற்காகக் காத்திருக்கின்றோம்? என்பதைப் பொறுத்து அதன் மகிழ்ச்சி அடங்கியிருக்கின்றது.

பிறப்புகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம். ஒரு சில பிறப்புக்கள் வரலாற்றை அழித்திருக்கின்றன. ஒரு சில பிறப்புக்கள் வரலாற்றை ஆக்கியிருக்கின்றன. ஒரு சில பிறப்புக்கள் உலகத்தை அதிர்ச்சி அடையச் செய்திருக்கின்றன. ஒரு சில பிறப்புக்களே உலகத்தை ஆச்சரியப்பட வைத்திருக்கின்றன. ஒரு சில பிறப்புக்களால் உலகம் வாழ்ந்திருக்கின்றது. ஒரு சில பிறப்புக்களால் உலகம் வீழ்ந்திருக்கின்றது. எல்லாப் பிறப்புக்களும் வரலாற்றில் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் ஒரு சில பிறப்புக்களால் வரலாறே நிகழ்ந்திருக்கின்றது. இந்த ஒருசில பிறப்புக்களில் மேலானதாக, தலையானதாக விளங்கும் பிறப்பு ஒன்றிற்குத் தான் விழா எடுக்கின்றோம். இப்பிறப்பு வாழ்வு தர வந்த பிறப்பு. வரலாற்றில் நிகழ்ந்தாலும் வரலாற்றை மாற்றியமைத்த பிறப்பு. வல்லமையான இறைவன் குழந்தையாய் வடிவமெடுத்த நிகழ்வு. கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்வுகள் ஒரு கதை வடிவில் விளக்கப்பட்டிருந்தாலும், அதில் சொல்லப்பட்டிருக்கும் செய்திகளும், பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்களும் ஆழமானவை. அதிசயத்தக்கவை இவை பற்றிப் பின்வருமாறு பார்ப்போம்.

திருவருகைக்காலம் என்பது நத்தாருக்கான தயாரிப்பு காலமாகும். ஆரம்பத்தில் பாஸ்கா விழாவுக்கான தயாரிப்பு காலமான தவக்காலம் போன்றதே இக்காலம் ஆகும். இக்காலத்தில் நடுத்தீர்வைக்காக இயேசு வரும் இரண்டாம் வருகைக்காக ஆயத்தப்படுத்துவது நமது கடமையாகும். இது ஆரம்பத்தில் 8ம், 9ம் நூற்றாண்டுகளில் பிரான்ஸ், அயர்லாந்து போன்ற நாடுகளில் வாழ்ந்த வனத்துத் துறவிகளால் தவம்,



ஒறுத்தல், ஒப்புரவு என்பதனை முக்கியமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. பின்னர் கார்த்திகை மாதம் 11ம் திகதி தூய மார்டினின் திருநாள் அன்று நடைமுறையில் வந்தது. எனவேதான் இவ் ஒறுத்தல், தயாரிப்பு முயற்சியை "மார்டின் தவ ஒறுத்தல்" என்றும் அழைப்பர்.

இந்தத் தயாரிப்புக் காலம் நான்கு வாரங்களை உள்ளடக்கியது. திருவருகைக்கால முதல் ஞாயிறு தொடக்கம் மார்கழி 16ம் திகதிவரை இயேசுவின் இரண்டாம் வருகைக்காக எம்மைத் தயாரிப்பது எனவேதான் இக்காலத்தில் திருமுழுக்கு யோவானின் வாழ்வு, பணி அவர் மக்களைத் தயாரித்த விதம் கூறப்படுகின்றது. எனவே இயேசுவின் வருகைக்கு நாம் எம்மை வருத்தி தவம் செய்து, ஒறுத்தல் முயற்சிகள் செய்து மனம் வருந்தி ஒப்புரவாக வேண்டிய காலமாக இருக்கின்றது. எனவே இக்காலத்தில் பாடல்கள்பாடி மனந்திரும்ப விழைகின்றோம். இக்காலத்தில் சந்தோஷமான, ஆடம்பரமான, களியாட்ட நிகழ்வுகள், திருமணங்கள் கூட நடைபெறுவது இல்லை. முழுமையான தயாரிப்பின் காலம்.

மார்கழி மாதம் 17ம் திகதி தொடக்கம் 24ம் திகதி வயையான காலம். இயேசுவின் பிறப்புக்கு எம்மை ஆன்மீக ரீதியாக ஆயத்தம் செய்யும் காலம். இக்காலத்தில் கபிரியேல் தூதரின் வார்த்தை சூசையப்பரின் மண ஒப்பந்தம், அவரது மனநிலை போன்றவை பற்றி வாசித்து எம்மைத் தயாரிக்கின்றோம். இவை பற்றிய தெளிவு எமக்கு இல்லையென்றால் நம் உள்ளகத் தயாரிப்பு அர்த்தமற்றதாகிவிடும்.

அதேபோன்று தான் இந்தக் காலத்தை ஆரம்பிப்பதற்கு முன் நாம் (**Advent Wreath**) திருவருகைக்கால இலை வளையம் தயாரிக்கின்றோம். இதனை மலர் வளையம் என்று சொல்வது தவறு. மலர் வளையம் மரித்தோரின் சமாதியில் வைப்பது. இங்கு மலருக்கு எவ்விதத்திலும் சம்பந்தம் இல்லை. எனவே இந்த பச்சை நிற இலை வளையத்தினுள் 3 ஊதா நிற மெழுகுவர்த்திகளும், 1 மென்சிகப்பு நிற மெழுகுவர்த்தியும் தற்போது நடுவில் வெள்ளைநிற மெழுகுவர்த்தியும் ஒவ்வொரு வாரத்திலும் பற்ற வைக்கப்படுகின்றது. இவை ஆரம்பத்தில் வீடுகளிலேயே ஆயத்தம் செய்து வைக்கப்பட்டன. ஆனால் காலப்போக்கில் இது ஆலயங்களில் வைக்கப்பட்டது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் சில பகுதிகளில் ஆலயங்களுக்குச் செல்ல முடியாமல் இருப்பதினால் மீண்டும் இவற்றை வீடுகளில் செய்து வைப்பது மிகவும் சிறந்தது. இந்த நான்கு மெழுகுவர்த்திகளும் நான்கு ஞாயிற்றுக்கிழமையையும், அதேபோன்று ஆதாம் ஏவாளின் வரலாறு அடங்கிய 4000 ஆண்டு கால வரலாற்றை உள்ளடக்கியதையும் குறிப்பிடுகின்றது.

இந்த இலை வளையம் வட்டவடிவமாக இருப்பதற்கு காரணம். இறைவன் தொடக்கமும் முடிவுமற்ற நிரந்தரமானவர் என்பதைக் குறிக்கின்றது. இது பச்சை நிற இலைகளால் (**Evergreen**) அலங்கரிக்கப்பட்டிருக்கும். இது எப்போதும் பச்சை பசேல் என்று இருக்கும். இங்கு ஏற்றப்படும் மெழுகுவர்த்திகளின் பிரகாசம் வழிபாட்டில் மிக முக்கியமானது. முதல் வாரத்தில் முதலாவது ஊதா நிற மெழுகுவர்த்தி பற்ற வைக்கப்படுகின்றது. இது இயேசுவின் 2ம் வருகைக்கான **எதிர்நோக்கினைக்** குறிக்கின்றது. 2வது வாரம் இயேசு தனது இரண்டாவது வருகையின் போது முடிவில்லா வாழ்வைப் பெற்றுத்தருவார் என்ற **நம்பிக்கையை** தருகின்றது. மூன்றாவது வாரத்தில் மென்சிகப்பு நிற மெழுகுவர்த்தி பற்ற வைக்கப்படுகின்றது. இது திருவருகைக்காலத்தின் மத்திய பகுதியைக் குறிப்பதால் **அக்களிப்போடு** இருப்பதைக் குறிக்கின்றது. நான்காவது வாரத்தில் நான்காவது ஊதா நிற மெழுகுவர்த்தி பற்றவைக்கப்படுகின்றது. இது **அமைதியைப்** பெற்றுத்தரும். அமைதியின் அரசரின் பிறப்பினையும் அவர் எமக்கு உள்ளார்ந்த, வெளியார்ந்த அமைதியையும் பெற்றுத் தருவார் என்பதைக் குறித்து நிற்கின்றது. இறுதியாக கிறிஸ்து பிறப்பு அன்று, மத்தியில் உள்ள வெள்ளை நிற மெழுகுவர்த்தி பற்ற வைக்கப்பட்டு இயேசு கொண்டு வந்த ஒளி பிரகாசமாக இப்பூவுலகம் எங்கும் ஆலோபித்து நிற்பதைக் குறிக்கின்றது.

எனவே மேற்கூறப்பட்ட அடையாளங்களின் ஆழ்த்தன்மைகளையும், அதிசயத் தன்மைகளையும் உணர்ந்தவர்களாக நாம் இந்த இக்கட்டான சூழ்நிலையில் வீட்டினுள் முடக்கப்பட்டவர்களாக இருந்து எம்மைக் குடும்பமாக, தனிப்பட்ட முறையில் தயாரிப்போம்.

சிறப்பாக இந்த ஆண்டு நத்தார் தினத்திற்கு உள்ளார்ந்த ரீதியான, ஆன்மீகத் தயாரிப்பை மேற்கொள்வோம். ஆடம்பரமாக உடை அணிந்து, பட்டாசுகள் கொழுத்தி, கரோல் கீதம் பாடி, பரிசுப் பொருட்கள், கேக், பலகாரம் தயாரித்து நாமும் நமது நண்பர்களும் உண்டு மகிழ்ந்து இருப்பதை மாற்றி இச் சூழ்நிலையில் தனிமையில், வறுமையில் வாடி நிற்கும், அங்கலாய்ப்போடு, எதிர்காலம் எப்படி அமையும் என்று வேலைவாய்ப்பு இல்லாமல் பொருளாதார நெருக்கடியோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரோடு ஏதோ ஒருவிதத்தில் பகிர்ந்து கொள்வோம். அப்போதுதான் இந்த கிறிஸ்மஸ் பெருவிழா, கிறிஸ்து அறிவிப்பு பெருவிழா நம்முடைய சிந்தனை, சொல், செயல் அனைத்தின் மூலமாக கிறிஸ்துவைப் பறைசாற்றுவதாக மாறும் அப்போது உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகும். உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகும். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துக்கள். இயேசு பாலகன் எம் ஒவ்வொருவரின் இதயக் குடிலில் பிறப்பாராக.




# புது விடியல் கண்டிடு

மொட்டுக்கள் விரிவது இராக்கால மௌனத்தில்
சிட்டுக்கள் பறப்பது பொன்வான மேகத்தில்
படைத்தவன் வாழ்வது அன்பென்னும் இதயத்தில்
அறிந்திடு மானிடனே புது விடியலொன்றை கண்டிடு!

தாழ்ச்சியும் சாந்தமும் சுமை தணிக்கும் நுகங்கள்
மன நிலம் பேணி அன்பு விதை வளர்ப்போம்
நாளும் ஒருவருக்கு நன்மை செய்யும் வாழும் முறை வகுப்போம்
ஏகாந்த நிலைமையிலும் இறைவனுடன் வாழ்வோம்!

சுற்றிச் சிலுவைகள் சீறிடினும்
வெற்றி உனக்கென்றே வெளிக்கிளம்பு
அவதரிக்கும் பாலன் இயேசு - உன்
பாவம் போக்கி தூக்கிடுவார்!

விதை விதைத்தவன் திணையறுப்பானாகில்
கொரோனா எனும் கொடியவனை
விதைத்தவன் யாரென சிந்தி!
தலையின்றி மெய்யியலை - அதுபோல
உன் செயலின்றி கொரோனா நோயில்லை

பாலங்கட்ட பயந்த நீ - உன்னைச்
சுற்றி மகா சுவர் கட்ட நினைக்கின்றாய்
ஒவ்வொரு மனிதரும் தன்னலம் துறந்து
மனுவுருவான வார்த்தையை
மனங்களில் ஏற்றிட எத்தனிப்போம்
இந்நத்தார் பண்டிகையில்

கொரோனா மத்தியில் - கொண்டாடு நத்தாரை
அமைதியான முறையில் - கண்டிடுவாய்
புது விடியலை

**சகோ. யோ. ஸ்டீபன், இறையியல் 1ம் வருடம்**
**தேசிய குருமடம் – கண்டி**

# மெய்யறிவு கொண்டிடுவோம்....

**படைப்பின் சிகரமாம் மனிதன்**
**சிகரத்தை தொட நினைத்தது குற்றமல்ல,**
**சிருஷ்டித்தவனை விட**
**தானே சிறந்தவன்**
**என நினைத்தது தான் குற்றம்.**
**இதை உணர்ந்திட தானோ இந்த**
**கொரோனா?**

**படித்தவனாயினும் பாமரனாயினும்**
**பணம் படைத்தவனாயினும் ஏழையாயினும்**
**பண்பானவனாயினும் பாவியாயினும்**
**அனைவருமே சமம் என்பதை**
**உணர்த்திடத் தானோ இந்த கொரோனா?**

**கொரோனா அழிவு அல்ல ஆசீர்வாதம்!**
**ஆ!.... என்ன இது? ஆம் அப்படித்தான்**

**அன்று - உயர்வுத் தாழ்வு, பெண்ணடிமை**
**தானே சிறந்தவன் என்ற தலைக்கனம்,**
**பாவச் சூழல் - இதைத் தகர்த்திடவே**
**மாபரன் மானிடனாய் மலர்ந்தார்**
**இன்று - உயர்திணைப் பண்புகளோடு**
**அஃறினை வாழும் போது**
**அஃறினைப் பண்பு கொண்ட**
**உயர்திணையை**
**மாற்றிடத்தான் மாபரன் வருகிறார்**

**இம்முறை மாபரன் மலர்வினில்**
**கூட்டம் தேவையில்லை - கும்மாளம்**
**தேவையில்லை, குடி தேவையில்லை,**
**குளப்பங்கள் தேவையில்லை**
**இருப்பதைப் பகிர்ந்திடு - இறை**
**இன்பத்தை உணர்த்திடு**

**சொலமன் ஜவன் ஹெற்றிகோ**
**இறையியல் 1ம் வருடம்**
**தேசிய குருமடம் – கண்டி**






# எதிர்பார்ப்பிற்குள் கிறிஸ்மஸ்

தரணியெங்கும் கவலை ஓலம்!
தகர்த்தெரிய முடியா காலம்!
தரைமட்டமாகிய லாபம்!
தந்தது எமக்கு சாபம்!

எண்ணங்கள் பலக்கோடி
ஏன் இந்த சோதனை!
எண்ணிலடங்கா உயிர்கள் பறிக்கப்பட்டு!
ஏமாற்றங்கள் குவிக்கப்பட்டு!
எழ முடியாமல் தவிக்கின்றோம்!

(இவ்)விந்தை உலகம் என்றுமே கானா பாடுங்கள்!
வீராப்போடு திரிந்த நாடுகள்!
வீர வசனம் பேசிய வீரர்கள்!
வீணே பணத்தை சேமித்த உறவுகள்!
இன்று விடைக்காணா கேள்விகளுடன்
விடியலுக்காய் காத்திருக்கின்றன!



எத்திசைக்கும் எங்கள்
எதிர்ப்பார்ப்பின் சிகரமாய்!
எங்கள் உள்ளக்குமுறல்களை ஊமையாகிட!
எம் இதயங்கள் சங்கமிக்க!
எம் இல்லங்களிலும், உள்ளங்களிலும்
இரு கரம் குவித்து
இனிதே வரவழைப்போம்!
இம்மானுவேலாம் எம் இயேசுவை!

**சகோ. R. போல் அன்டனி, இறையியல் 2ம் வருடம்**
**தேசிய குருமடம் – கண்டி**

# எதிர்பார்ப்பு "கிறிஸ்மஸ்"

பசுமையை இழந்து
பறவைகளின் சத்தத்தை இழந்து
பாரம்பரியத்தை இழந்து
பாவைகளின் உரிமையை இழந்து
விளைச்சலின் பெறுமதிகளை இழந்து
இன்புற முயன்றோம்!

நாங்கள் என்ற அகந்தை யோடு
எதையும் சாதிப்போம் என்ற எண்ணத்தோடு
இன மொழி பேதத்தால் - இவ்வுலகத்தை
சாக்கடையாக்கி விட்டோம்
உணர்கின்றோம்
இரக்கமில்லா எங்கள் ஊனச் செயல்களை!

இனியும் வேண்டாம் இச் சோதனை
இறைவா இன்றுடன் நிறுத்தி விடு
இவ் எண்ணிலடங்கா உயிரிழப்பை
இனிதே அழைக்கின்றோம் - இனிதான
உம் பிறப்பை எதிர்பார்ப்பு ஆகிட!

**சகோ. எ. ரொமி ஜெயகாந்தன்,**
**இறையியல் 1ம் வருடம், தேசிய குருமடம் – கண்டி**

# மீட்பு



எண்ணிலடங்கா மாளிகைகள்!
எத்திசைக்கும் கேட்க வானொலிகள்!
எம்மிடம் இத்தனையும் இருக்க!
ஏன் இந்த உயிர் பிதற்றம்?

கொடுமைகளின் உச்சம்!
கொரோனாவால் அச்சம்!
கொஞ்சமாவது கிடைக்குமோ நிம்மதி!
கொழுந்துவிட்டு எரியும் இவ் குமுறல்களிலிருந்து?

மனமுவந்து மன்றாடுகின்றோம்!
மதங்களை துறந்து!
மீட்பராம் இயேசுவே
மீட்டிடுவீர் எம்மை!

**சகோ. டொமினிக் நிஷாந்தன், இறையியல் 1ம் வருடம்**
**தேசிய குருமடம் – கண்டி**

## ஏந்தன் மீட்பர் பூவியில் வந்த நாளிதே! அவர் வந்த நாளும் இன்ப நாளாய் ஆனதே!

வார்த்தையான தேவன் அவர் மனுவுருவானார்
ஏழையாக பிறந்து - நம் மீட்பராய் வந்தார்
வானவர் வாழ்த்திட ஆயர்கள் வணங்கிட
தேவா! இறைவா! பணிந்தும்மை வணங்கிட
தேவ பாலனே! என் இயேசு தெய்வமே!

சாதிசமய உணர்வுகள் இனி ஒளிந்திட வேண்டும்
மனிதநேயம் மண்ணில் என்றும் மலந்திட வேண்டும்
ஒற்றுமை ஓங்கிட இயேசுவில் இணைந்திட
என்னை உமது கருவியாய் மாற்றிட
தேவ பாலனே! என் இயேசு தெய்வமே!

# புதுமைகள் தொடர..

**அகிலத்தை**
**படைத்தவரே!**
**எங்கள் அற்புத நாயகரே!**
**பூவுலகை புதுப்பிக்க**
**புதிதாய் பூமிக்கு**
**வந்தவரே!**

**விண்ணுலக**
**வித்தகரே!**
**உலக விடியலின்**
**மறுவுருவே!**
**உணவின்றி**
**தவித்தோருக்கு**

**உதவிடவே**
**நீ வந்தாய்!**
**மானிடராய் பிறக்க**
**மாட்டுத் தொழுவத்தில்**
**அவதரித்தாய்!**
**விண்ணில் வெள்ளி**
**முளைத்தது**
**மண்ணில் வேதநாயகன்**
**பிறந்தான்!**

**பூபாலம் இசைத்தே**
**எம் ஏசுபாலனை**
**வரவேற்போம்**
**மாற்றங்கள்**
**மண்ணில் மலர**
**வாழ்த்துவோம்!**
**புதுமைகள் மலர**
**பூபாலம் இசைப்போம்!**
✪✪✪



## இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள்.

»பேதுரு«

# இறைவார்த்தை வழிபாடு




### திருவருகைக்காலத்தின் 4வது ஞாயிறு [20.12.2020]

**வாசக விளக்கம்:** திருவருகைக்காலத்தின் 4வது ஞாயிறு தினமான இன்று திருஅவையானது மரியன்னையை மதிக்க, நினைவுகூற அவளின் முன்மாதிரிகையைப் பின்பற்ற நம்மை அழைக்கின்றது. அன்னை மரியாள் விசுவாசத்தின் தாய், கீழ்படிதலின் தாய் ஆண்டவருடைய தூதனின் வார்த்தைக்கு அடிபணிந்து தனது வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிதலோடு வாழ்ந்து இறைவனின் மீட்புத் திட்டத்தில் தன்னையும் ஒரு கருவியாக இணைத்துக் கொண்டவள். கடவுளுடைய எண்ணங்கள் கடவுளுடைய வழிமுறைகள் வித்தியாசமானவை மனித அறிவுக்கு எட்டாதவை கடவுள் தன் மகனை இவ்வுலகிற்கு அனுப்பத் திருவுளம் கொண்ட பொழுது அவர் தேர்ந்து கொண்ட வழிமுறைகள் வித்தியாசமானவை. உலகம் மடமையென கருதியதைக் கடவுள் தெரிந்து கொண்டார். பழமைவாதமும் பிற்போக்கு வாதமும் மூடநம்பிக்கைகளும் நிறைந்த சமுதாயத்தில் வாழ்ந்த அன்னை மரியாளுக்கு கடவுளின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற ஆர்வம் இருந்தது. தனக்கு என்ன நேர்ந்தாலும் கடவுளுக்கு கீழ்ப்படிந்திருந்தது. தன் வாழ்வில் தனக்கும் தன் மகனுக்கும் நடந்த எல்லாவற்றையும் தன் மனதில் இருத்தி சிந்தித்தாள். இப்படிப்பட்ட அன்னையை நாமும் நம் மனதில் நிறுத்தி இந்தக் கொள்ளைநோயின் தாக்கத்திலிருந்து நம்மையும், உலக மக்கள் யாவரையும் காப்பாற்ற அவளின் பரிந்துரையை வேண்டிடப் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : 2சாமு 7:1-5, 8-12, 14-16**
தாவீதின் அரசு ஆண்டவர் முன் என்றென்றும் உறுதியாக இருக்கும்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரின் பேரன்பைப் பற்றி நான் என்றும் பாடுவேன்

**இரண்டாம் வாசகம் : உரோ 16:25-27**
ஊழி காலமாக மறைபொருளாக இருந்த நற்செய்தி இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 1:26-38**

#### விசுவாசிகளின் மன்றாட்டு

வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்.

அடிமைப்பட்டுக் கிடந்த மனிதனை மீட்க மெசியாவை மீட்பராக அனுப்பிய கடவுளின் திட்டங்களையும், வழிமுறைகளையும் உய்த்துணர்ந்து தன் மக்களை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர் ஆகிய அனைவரையும் ஆசீர்வதித்திடவும் தனது வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிதலுடன் வாழ்ந்த மரியன்னையைப் போல் நாமும் இறைவனின் மீட்புத் திட்டத்தின் கருவிகளாக வாழ்ந்திடவும் அருள் வழங்கிட எம்மத்தியில் எழுந்தருளி வாரும்

நாமும் கடவுளின் திருவுளத்திற்கு பணிந்து வாழவும், கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் உறுதிப்-பாடு கொள்ளவும், இறையரசு பரவ எவ்வகைத் துன்பங்களையும், ஏற்றுக் கொள்ளவும், இதுவும் கடந்துபோகும் என்ற நிலையில் கொரோனாவும் எம்மை விட்டு கடந்து போகும் என்ற நம்பிக்கையில் நாம் வாழவும், எங்கள் உள்ளங்களுக்கு ஒளியூட்ட எழுந்தருளி வாரும்

கிறிஸ்து பிறப்பு விழாவின் உண்மையான அர்த்தங்களை அறிந்து கொண்டவர்களாக மனமாற்றம் பெறவும், வெளி ஆடம்பரங்களை அகற்றி எளிமையான முறையில் கொண்டாடவும், ஏழை எளியவர்களுக்கு எம்மால் இயன்ற உதவிகள் புரியவும் எல்லா நிலைகளிலும், எல்லாச் செயல்களிலும், எல்லாத் துன்பங்களிலும் இறைத்திட்டத்தை உய்த்துணரவும், மரியாவைப் போல் இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கவும் வேண்டிய நல்ல மனச்சான்றை எமக்கு வழங்கிட எங்கள் மத்தியில் எழுந்தருளி வாரும்

### கிறிஸ்து பிறப்பின் பெருவிழா [25.12.2020]

**வாசக விளக்கம்:** துன்பியல் நிறைந்த ஒரு காலகட்டத்தை கடந்து கொண்டிருக்கும் நமக்கு இன்றைய கிறிஸ்து பிறப்பின் பெருவிழா மகிழ்ச்சியூட்டும் விழாவா? என்ற கேள்வி எழுவது இயற்கையே ஆயினும் நாம் விசுவாசத்தின் மக்கள் இதுவும் நம்மைக் கடந்து செல்லும் என்ற நம்பிக்கை கொண்டவர்கள் என்பதால் நிச்சயம் இது நமக்கு மகிழ்ச்சியூட்டும் பெருவிழாதான். இன்றைய பெருவிழாவானது நம் கடவுளின் கருணையை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. ஏனெனில் கடவுள் மனிதன் மீது கொண்ட நிலையான அன்பை நித்தியத்திற்கும் வெளிப்படுத்தும் பெருவிழாதான் கிறிஸ்துபிறப்பு பெருவிழா. இன்றைய முதல் வாசகத்தில் அன்பின் வெளிப்பாடு எப்படிப்பட்டது என்பதை எசாயா இறைவாக்கினர் அம்மக்களின் மனநிலைக்கு ஏற்ப எடுத்துரைக்கின்றார். "மனிதர் அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது" என்று தூய பவுல் இரண்டாம் வாசகத்தில் கூறுகிறார். இந்த அன்பின் வெளிப்பாடு எல்லோரையும் சொந்த மக்களாகவும் இம்மையில் நாம் பெறும் மகிழ்ச்சியைப் பெறும்பொருட்டு தன்னையே நமக்கு உணவாக ஒப்படைத்தார் என உணர்த்துகின்றது. நற்செய்தியில் எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன் என்ற மகிழ்ச்சியின் செய்தியைப் பார்க்கின்றோம். எனவே மக்கள் அனைவரின் மீட்புக்காகவும் இயேசு கொண்டுவந்த இந்த அன்பின் வெளிப்பாடு நிலைக்கவும். எம்மைச் சூழ்ந்துள்ள துன்பியல் பாலக இயேசுவின் வழியாக விலகவும் இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : எசாயா 52:7-10**
மண்ணுலகின் எல்லைகள் யாவும் நம் கடவுள் அளிக்கும் மீட்பைக் காணும்.

**பதிலுரைப் பாடல் :**
உலகெங்குமுள அனைவரும் நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.

**இரண்டாம் வாசகம் : எபி 1:1-6**
கடவுள் தம் மகன் இயேசு வழியாக நம்மிடம் பேசியுள்ளார்

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! புலர்ந்தது நமக்குப் புது நாள் பிற இனத்தாரே, வருவீர், இறைவன் மலரடி தொழுவீர், ஏனெனில் உலகின்மீது எழுந்தது பேரொளி இன்றே அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 1:1-18**

#### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கடவுள் உலகினர் மேல்கொண்ட அன்பின் வெளிப்பாடான கிறிஸ்து பிறப்பு விழாவை சிறப்பிக்கும் நாம் கிறிஸ்து இயேசுவின் வருகையின் நோக்கத்தை உணர்ந்தவர்களாக திருஅவையின் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் அனைவரோடும் இணைந்து ஏழைகள் துன்புறுவோர், நோயுற்றோர் அனாதைகள் ஆகிய அனைவருக்கும் ஆறுதலும், தேறுதலும் உதவிகளும் புரிந்து வாழ வரமருள வேண்டுமென்று...

தனது சாயலிலும் பாவனையிலும் எம்மைப் படைத்த இறைவன் நம்மீது கொண்ட நிலையான அன்பை நித்தியத்திற்கும் வெளிப்படுத்த மனிதனாய் அவதரித்த பெருவிழாவை கொண்டாடும் நாம், வெளி ஆடம்பரங்களை அகற்றி ஆன்மீக ஆடம்பரம் கொண்டவர்களாக வாழவும், மனித நேயம் கொண்டவர்களாக எல்லா மொழியினரையும், மதத்தினரையும் மதித்து அவர்களை அன்பு செய்து வாழவும் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

அன்புத் தெய்வமே குழந்தை இயேசுவே இந்த வருடம் முழுவதும் பெரும் துன்பத்தின் ஊடாக எம்மை வழிநடத்தின உம் கிருபைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். எதிர்வரும் காலங்களிலும் உமது கிருபை எம்மோடிருந்து எம்மை வழிநடத்தவும் இந்த கொடிய நோயின் தாக்கம் அகன்றுபோகவும், பொதுநல நோக்குடனும் சகோதர அன்புடனும் நாங்கள் நடந்து கொள்ளவும் தேவையான அருள்வரங்களை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று...

### திருக்குடும்பத் திருவிழா [27.12.2020]

**வாசக விளக்கம்:** இன்று நாம் திருஅவையோடு இணைந்து திருக்குடும்ப பெருவிழாவை சிறப்பிக்கின்றோம். திருக்குடும்பத்தில் விளங்கிய மேலான பண்பு கீழ்ப்படிதல் ஆகும். இன்று எமது குடும்ப வாழ்வு கீழ்ப்படிவு இல்லாது சீரழிந்து சின்னாபின்னமாகிக் காணப்படுகின்றது. இந்நிலையில் இயேசு வாழ்ந்த திருக்குடும்பத்தைப் பற்றி சிந்திக்கின்றோம். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம், நல்ல குடும்பம், நல்ல தலைவர்களை நல்ல தியாகிகளை மனிதநேயமுள்ளவர்களை உருவாக்கும். இதைத்தான் இன்றைய திருவிழா சுட்டிக்காட்டுகிறது. நாசரேத்து என்றும் ஊரிலே வாழ்ந்த ஒருகுடும்பம் உலகம் முழுவதும் பேசப்படுகிறது. குடும்பம் சமூகத்தின் உயிர் நாடி, கிறிஸ்துவின் மறையுடல் அன்பின், பண்பாட்டின், அருளின், ஆன்மீகத்தின் பிறப்பிடம் ஆனால் இன்று எமது குடும்பங்களை எடுத்துக்கொண்டால் எங்கும் பகையுணர்வு, வெட்டுக்குத்து, நாசரேத்து குடும்பத்தில் என்றும் அமைதி நிலவியது. துன்பங்கள் பிரச்சினைகள் மத்தியிலும் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு வாழ்ந்தனர். மூவரிடமும் கடவுள் விருப்பத்தை நிறைவேற்றும் ஆர்வம் இருந்தது. ஒருவர் மற்றவருடைய நல்வாழ்வில் அக்கறை கொண்டு வாழ்ந்தனர். எனவே குடும்பங்களுக்கு மாதிரியாக விளங்கும் திருக்குடும்பத்தைப் பிரதிபலித்து வாழவும், கொரோனா நோயின் பாதிப்பில் இருந்து விடுபட கட்டுப்பாடுகளையும் கடமைகளையும் குடும்பம் குடும்பமாக பின்பற்றி கடவுளுக்கு கீழ்ப்படிந்த இயேசு, மரி, சூசையைப் போன்று வாழவும் இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தொ.நூ 15:1-6, 21:1-3**
உனக்குப் பிறப்பவனே உனக்குப்பின் உரிமையாளன் ஆவான்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவர் தம் உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொண்டுள்ளார்.

**இரண்டாம் வாசகம் : எபி 11:8,11-12,17-19**
ஆபிரகாம், சாரா, ஈசாக்கு ஆகியோரின் நம்பிக்கை

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! பலமுறை பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 2:22-40**

#### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

திருக்குடும்ப பெருவிழாவை சிறப்பிக்கும் நாம் அனைவரும் அன்பின் ஓவியமாக, அமைதியின் உறைவிடமாக, ஞானத்தின் ஊற்றாகத் திகழும் திருக்குடும்பத்தைப் பிரதிபலித்து எமது குடும்பம் வாழவும், பெரும் குடும்பமாகத் திகழும் திருஅவையையும் அதன் பணியாளர்களை ஆசீர்வதிக்கவும், நாசரேத்து ஊரின் திருக்குடும்பத்தில் விளங்கிய சீரிய பண்புகளை நாம் கைக்கொள்ளவும் வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

பிளவுகள், பிரிவுகள், சுயநலன்கள் போன்றவற்றால் சீரழிந்து சின்னா பின்னமாகிக் கொண்டிருக்கும் இன்றைய குடும்பவாழ்வு ஏற்படுத்தும் சமுதாயச் சிக்கல்களை உணர்ந்தவர்களாக சமுதாயத்தின் உயிர்நாடியாகத் திகழும் குடும்பவாழ்வை சீர்படுத்தி புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல், பழிவாங்காமை போன்றவற்றில் தடம்பதித்து நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பதற்கேற்ப வாழ்ந்திடத் தேவையான அருள் வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

மாபெரும் கொடிய நோயால் அல்லாடிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் வாழும் நாமனைவரும் சமூகக் கட்டுப்பாடுகளையும் சுகாதார பழக்கவழக்கங்களையும் கடைப்பிடிக்கவும், நமது குடும்பங்களின் பாதுகாப்பு நமது கைகளில் என்பதை உணர்ந்தவர்களாக திருக்குடும்பம் போல் ஒருவர் மற்றவருக்காக என்பது போல் பொறுப்புடன் வாழவும், குடும்பம் குடும்பமாக செபத்தில் நிலைத்திருக்கவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

தொடர்ச்சி 13ம் பக்கம்...






“தெய்வக் குழந்தை தன் தொடுகையால் உன்னை மீட்க முடியும்”

# பாலகன் இயேசு எம் இதய விடுதியில் பிறக்க

# எப்போது இடம் கொடுக்கப் போகின்றோம்?



ஆக்கம். அருட்சகோ.
R. ஜோசப் ஜெயகாந்தன்.

உரோமையப் பேரரசன் சீசர் அகஸ்துவின் கட்டளைப்படி குடிக் கணக்குக் கொடுக்க பெத்லகேம் வந்தபோது தங்க இடமின்றி இயேசுவின் பெற்றோர் தவித்தார்கள். பேராயர் புல்டன் ஷீன் “கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு” எனும் அரிய நூலில் இவ்வாறு எழுதுகின்றார் “விண்ணும் மண்ணும் யாருக்குச் சொந்தமோ அவர் பிறப்பதற்கு இடம் தேடியும் கண்டடையவே முடியவில்லை. படைப்பிலே, படைத்தவருக்கு ஓர் இடம் கூடக் கிடைக்காதிருக்க முடியுமா? யூத மக்களைக் கொடூரமாக அடக்கி வைத்திருந்த உரோமானியப் படைவீரர்களுக்கு விடுதியில் இடம் இருந்தது. கீழை நாட்டின் வளமான வியாபாரிகளுடைய விபச்சாரப் பெண்களுக்கு அங்கே இடம் இருந்தது. மெல்லிய ஆடை அணிந்து அரசமாளிகையில் வாழ்ந்தோருக்கு அங்கே இடம் இருந்தது. உண்மையில் விடுதிக்காப்பாளனுக்கு கொடுக்க காசு வைத்திருந்தோருக்கு இடம் இருந்தது. ஆனால் உலகில் உறைவிடமற்ற இதயங்களுக்கெல்லாம் உறைவிடமாக இருக்க வந்த இறைமகனுக்கு அங்கே இடமில்லை. கால நிறைவில் வரலாற்று ஏடுகளின் இறுதி வரிகள் எழுதி முடிக்கப்படுகையில் மிகவும் வருந்தத்தக்க வரியாக இருக்கப் போதுவது இதுதான், “விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை” (லூக் 2:7)

விடுதி என்பது செல்வர்களுக்கும் வசதிபடைத்தோருக்குமாக இருக்க, ஏழை இடையர்களின் தொழுவத்தில் இயேசு பிறக்கநேர்ந்தது. உலகிலேயே மிகவும் அழுக்கான இடமாகிய குகையிலே புனிதம் பிறந்துள்ளது. விலங்குகளைப் போன்று செயற்பட்ட மனிதர்களால் பின்னாளில் கொலை செய்யப்பட இருந்தவர் விலங்குகளின் நடுவில் பிறந்துள்ளார். வானின்று இறங்கி வந்த வாழ்வுதம் அப்பமென பின்னாளில் தம்மைப் பற்றிக் கூறுபவர், விலங்குகளின் ஒரு தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டுள்ளார்” என்று பேராயர் புல்டன் ஷீன் மேலும் கவத்துவமாக எழுதுகின்றார். அவ்வாறு விடுதியில் இடமில்லை என்று புறக்கணிக்கப்பட்டு, விலங்குகளின் நடுவே பிறந்துள்ள இயேசு மனிதர்களுக்கு கொடுக்கும் செய்தி என்ன?

பழங்காலக் கதை ஒன்றின்படி கொடிய, வஞ்சகமான, இரத்தவெறிபிடித்த ஓநாய் ஒன்று பெத்லகேம் பகுதியில் வாழ்ந்து வந்தது. ஆபத்தான அந்த ஓநாயிடமிருந்து இடையர்கள் தங்கள் பிள்ளைகளையும், ஆடுகளையும் பாதுகாக்க வேண்டியிருந்தது. பின்னர் ஒரு புனித இரவு வந்தது “ஒரு குழந்தை பிறந்துள்ளது” என்று வானதூதர்கள் அறிவித்தார்கள். கல்வியறிவு இல்லாத அந்த இடையர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அக்குழந்தையைப் பார்க்கப் போவது அந்த ஓநாய்க்கு ஆச்சரியமாக இருந்தது. பசியோடு இருந்த அதுவும் சென்று ஓரிடத்தில் மறைந்து காத்துக் கொண்டிருந்தது. இடையர்கள் குழந்தையை வணங்கியபின் சென்றுவிட, மரியாளும் சூசையப்பரும் களைப்பினால் அயர்ந்து தூங்கினார்கள். அந்த நேரத்தில் ஓநாய் மெதுவாகத் தொழுவத்தில் நுழைந்து தீவனத் தொட்டியின் அருகே வந்து நின்றது. தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த பச்சிளம் குழந்தையைப் பார்த்தவுடன், “நல்ல இரை கிடைத்துவிட்டது” என்ற மகிழ்ச்சியில் அது நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு இரைக்க இரைக்க நின்றது.

நடுக்கத்திற்குரிய காட்சி அது. அது தன்னுடைய உதடுகளைத் தானே நக்கி விழுங்கிக் கொண்டது. அது தீவனத் தொட்டியின் மேல் குதிக்க எத்தனிக்கையில் குழந்தை இயேசுவின் பிஞ்சுக் கை நீண்டு அதன் உரோமத்தை வருடிக் கொடுத்தது. அதுவரை யாரும் அந்த ஓநாயை இப்படி அன்போடு வருடியது இல்லை. குழந்தையின் குரல், “ஓநாயே! உன்னை எனக்குப் பிடித்திருக்கின்றது” என்றது. அதே நேரத்தில் கற்பனை செய்ய முடியாத ஒன்று நிகழ்ந்தது. பெத்லகேமின் இருள் சூழ்ந்த அந்த தொழுவத்தில் ஓநாயின் தோல் மாறி ஒரு மனிதன் தோன்றினான். அவன் முழந்தாட்படியிட்டு குழந்தையின் கையை முத்தி செய்து ஆராதித்தான். பின்பு, எப்படி அவன் ஓநாயாக மெல்ல உள்ளே நுழைந்தானோ அது போலவே மெல்ல வெளியேறி “தெய்வக் குழந்தை தன் தொடுகையால் உன்னை மீட்க முடியும்” என்று ஒவ்வொருவருக்கும் அறிவித்தான்.

கதையென்றாலும் ஒரு முக்கிய கருத்துக்காகவே இதை உருவாக்கியிருக்கின்றார்கள். மனிதர்கள் கடவுளின் மீட்பரைப் புறக்கணிக்கின்றார்கள். விடுதியில் இடமில்லை என்றார்கள். அவர்களுடைய இதய விடுதியிலோ எல்லாவித உலக ஆசைகளுக்கும் இடமிருக்கின்றது. அவர்கள் விலங்குகளைப் போல் மாறிவிட்டார்கள். ஆனால் மாட்டுத்தொழுவத்தில் விலங்குகள் நடுவே பிறந்த இயேசு மனிதர்களைப் புறக்கணிக்கவில்லை. அவர்களை மீண்டும் மனிதர்களாக மாற்றுகின்றார். “என் இதய விடுதியில் உனக்கு இடமில்லை” என்று பல மனிதர்கள் கடவுளிடம் சொல்கின்றார்கள். ஆனால் உன்னை எனக்குப் பிடித்திருக்கின்றது என்று குழந்தை வடிவில் வந்து கடவுள் சொல்கின்றார். ஒரு குழந்தையின் மழலை மொழிக்கு மயங்காதவர் யார்? ஒரு பிஞ்சுக் குழந்தையின் மெல்லிய தொடுதலில் உருகாதவர் யார்? அதனால்தான் கடவுள் ஒரு குழந்தையின் வடிவில் இவ்வுலகில் தோன்றியுள்ளாரா? அவருடைய மெல்லிய அணுகுமுறையால் நம்முடைய உள்ளத்தின் ஓநாய்க்குரிய குணம் மறைந்து விடுகிறது.

மீட்பராம் குழந்தை இயேசுவை நம் உள்ளத்தின் ஆழத்தில் தொட்டு உணர்ந்தாலே நம் எல்லாப் பாவங்களும் போய்விடும். பணம், பதவி, செல்வாக்கு அதிகாரம் ஆகியவற்றுக்கான ஏக்கங்களும், தேடுதல்களும் மறைந்துவிடும். நம்முடைய எல்லா முதன்மைகளும் கடவுள் தரும் மீட்பு குறித்தவையாக மாறிவிடும். விலங்குளைப் போல் ஒருவர் மற்றவரைக் கடிந்து விழுங்கும் இந்த உலகில் பகைமையும் வஞ்சகமும் சதிராடும் இவ்வுலகில், அரசியல் மற்றும் சமூக ஏமாற்றுத்தனங்களும், அடிமைத்தனங்களும் கொடிகட்டிப் பறக்கும் இந்த உலகில் ஒரு சிறு குழந்தையாகப் பிறந்த இயேசுவின் தொடுதல் உணர்வு நம் உள்ளங்களுக்கு வேண்டும். அதுவே எல்லா மக்களுக்கும் பெரும் மகழ்ச்சியூட்டும் நற்செய்தியாக அமையும் (லூக் 2:10)

இன்று நம் நாடு கொரோனா வைரசின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் கூட மற்றவனைப் பற்றிய கவலை உணர்வு இன்றி நான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற மனநிலை எத்தனை சூழ்ச்சிகளும், அநீதிகளும், பழிவாங்கல்களும் இடம்பெறுகின்றன. இன, மொழி, மதப்பாகுபாடு இன்று மீண்டும் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்துள்ளது. உண்மையான குற்றவாளிகள் வெளியிலும், போலியான ஆதாரமற்ற குற்றவாளிகள் உள்ளேயும் இருக்கும் அவலநிலை, அப்பாவி மக்களின் காணி பறிமுதலும், மற்றவர் நிலத்தில் கட்டாய குடியமர்த்தலும், தன் நாட்டவனை நம்பாமல், அவனை வளர்க்காமல், வெளிநாட்டவனை நம்பி, அவனை வளர்க்க எம் நாட்டு முதலீடுகளை அவர்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்கும் நிலை. பாராளுமன்றத்தில் மனிதனை மனிதன் மதிக்காமல், மற்றவர்களின் கருத்துக்கு செவிமடுக்காமல் மட்டம் தட்டும்நிலை. தங்கள் சுயநலனுக்காக தம் மக்களை ஏமாற்றி வாழும் அரசியல்வாதிகள், சுயதனிமைப்படுத்தல் நிலையங்களிலும் ஏனைய தனிமைப்படுத்தல் நிலையங்களிலும் பெண்களுக்கு இழைக்கப்படும் இம்சைகள்.

இவ் அசாதாரண சூழ்நிலையிலும் கொள்ளை இலாபமும் கலப்படமும் செய்யும் வியாபாரிகள் PCR பரிசோதனை தனியொருவக்கு மட்டுமல்ல முழு குடும்பத்திற்கும் செய்ய அச்சுறுத்தும் சில தனியார் வைத்தியசாலைகள், இவ்வாறு நாம் அடிக்கிக்கொண்டே போகலாம். இவர்கள் எல்லோருக்கும் பிறக்கும் இந்த இயேசு பாலகனுடைய பிஞ்சுக் கைகளின் தொடுதல் உணர்வு ஏற்படவேண்டும். அப்போதுதான் எம் இதய விடுதியில் இயேசு பாலகன் பிறப்பார். அத்தோடு “உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக” என்ற விண்ணகத் தூதர் பேரணியின் குரலுக்குப் பொருளிருக்கும். அனைவருக்கும் இயேசுவின் பிஞ்சுக் கரங்களின் தொடுகையுடன் கூடிய நத்தார் வாழ்த்துக்கள்.





# கிறிஸ்து பிறப்பு பெருவிழா - 2020

# கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயரின் சிறப்புச் செய்தி

**அன்பான சகோதர சகோதரிகளே,**

நாம் தற்போது திருவழிபாட்டு ஆண்டிற்கமைய திருவருகைக் காலத்தில் இருக்கின்றோம். திருச்சபையின் பாரம்பரியமானது திருவருகைக்காலத்தை **இரு பெரும் பண்புகளை கொண்டிருக்கிறது, அதாவது, கிறிஸ்துவின் முதலாம் வருகைத்தந்த வரலாற்று நிகழ்வை கொண்டாடும் கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு ஆயத்தமாகும் வேளை, உலக முடிவின்போது இடம்பெறவிருக்கும் அவரது இரண்டாம் வருகையை எதிர்ப்பார்த்து எமது இதயங்களை அவர்பால் திருப்ப முற்படவேண்டும். திருவருகைக்காலமானது ஆன்மீகம் மற்றும் எதிர்ப்பார்ப்பின் காலப்பகுதியாக இவ்வாறு அமைந்திருக்கிறது' [Ordo 2020 / 21P (1)].** இதிலிருந்து புலப்படுவது என்னவென்றால், நத்தார் திருவிழாவின்போது நாம் கொண்டாடும் கிறிஸ்துவின் முதலாம் வருகை அவரது மகிமையான மறு வருகையின்போது அவரை தகுதியான முறையில் வரவேற்க நம் உள்ளங்களை தயார்ப்படுத்துவதாகும்.

## தாழ்மையில் புலப்படும் அன்பு

மகிமையோடு வருகைத் தருவதாக கூறப்படும் ஆண்டவரின் இரண்டாம் வருகைப் போன்று அல்லாமல் அமைதியாகவும், தாழ்மையாகவும் பெத்லகேமில் இடம்பெற்ற அவரது முதலாம் வருகைக்காக அவர் தகுதியற்ற மிகவும் சிறிய இடத்தை தெரிவுசெய்தார். பெத்லகேமில் மாட்டுத்தொழுவத்தில் ஆதரவற்ற மனித நிலையைப்பற்றிக் கொண்டமை இறைவனின் வலிமை வாய்ந்த வெளிப்பாடாகும். கிறிஸ்து பிறப்பின் மெய் பொருள் மற்றும் வியப்பான நிலைப்பற்றி திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். **அதாவது அண்டத்தின் துகள் அளவிலான இந்த பூமியை தமது தெய்வீக செயற்பாட்டிற்க்கான நிலமாக தெரிவு செய்யவும்,** இவ்வுலகில் **'வலிமையற்ற இஸ்ராயேல் மக்களை'** தமது திட்டத்தை செயற்படுத்த ஒரு கருவியாகவும், **'எவரும் அறிந்திராத நாசரேத்து கிராமத்தை'** தமது இல்லமாகவும் எவராலும் மதிக்கப்படாத சிறிய கிராமமான பெத்லகேமில் கைவிடப்பட்ட மாட்டுத்தொழுவம் போன்ற நினைத்து பார்க்க முடியாத இடத்தில் தமது பிறப்பு இடம்பெற செய்தமையாகும். திருத்தந்தை கூறுவது யாதெனில், "இவை அனைத்தும் மேற்குறிப்பிட்ட தாழ்மை நிலையை பற்றிக் கொள்ளுதலுக்குள் அடங்கப்படுகின்றது என்பதாகும். **மனிதனின் ஆணவத்திற்கு எதிராக இறைவனின் அன்பு எனும் வழியை ஏற்படுத்தினார். அனைத்து விதமான பாவ செயற்பாடுகளுக்கும் தொடக்கமாக இருப்பது ஆணவமாகும். ஆனால், அன்பு அத்தகையது அல்ல, அன்பு பெருமை கொள்ளாது, அன்பு தன்னை தாழ்த்திக் கொள்ள தயங்காது. தாழ்மை என்பது உண்மையில் மிகவும் நல்ல விடயமாகும். நாம் நம்மை தாழ்த்திக் கொள்ளும் அளவு எளிய முறையில் ஏழை எளியவர்களோடு நெருங்கி செயற்படும்போது எமது மதிப்பு இன்னும் அதிகமாகிறது. பெருமை நிறைந்த மனிதனின் நிலையை அவனுக்கு சுட்டிக்காட்டுவதற்கு தம்மை ஒரு சாதாரண ஒருவராக மாற்றி தம்மை தாழ்த்திக் கொண்டமை இறைவனின் முன்மாதிரிகையான வெளிப்பாடு என்பது அவர் செயற்படும் விதத்தின் வழியாக வெளிப்படுத்தினார்.' (God and the world, இக்னேசியஸ் அச்சகம், சென் பிரான்சிஸ்கோ 2002, பக்கம் 213).**

## கீழ்ப்படிதலில் மறைந்துள்ள ஞானம்.

திருத்தந்தை மேலும் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், ஆணவமற்ற மனிதர்களாகிய இடையர்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பு அறிவிக்கப்பட்டபோதும் அரச மாளிகையில் அரச மகிமையில் வாழ்ந்த ஏரோது போன்றவர்களுக்கு கிறிஸ்துவின் பிறப்புப்பற்றி சிறிய தகவல் கூட கிடைக்கவில்லை என மேலும் திருத்தந்தை இவ்வாறு விளக்கப்படுத்துகின்றார். **மேலும் கிறிஸ்து பிறப்பு இடம்பெற்றதைபற்றி அறிந்தபோது அங்கு செல்வதற்கான ஆயத்தம் மற்றும் வெளிப்படைத்தனமும் இடையர்களிடம் காணப்பட்டது.** மரியன்னையும், யோசேப்பும், சிமியோனும் அன்னாவும், சக்கரியாவும் மற்றும் எலிசபேத் ஆகிய அனைவரும் இஸ்ராயேலர்களின் ஏழை மக்களை பிரதிநிதித்துவம் செய்பவர்களாவர். (பக்கம் 214) கிழக்கில் இருந்து வந்த ஞானிகள் மாட்டு தொழுவத்தில் பிறந்து தீவனத் தொட்டியில் உறங்கிக் கொண்டிருந்த அரசராம் அரசரை வணங்க வந்தவர்களாக நற்செய்தி அறிமுகம் செய்கிறது. 16ம் ஆசிர்வாதப்பர் குறிப்பிடுவது **'முதலில் வருகைத் தந்தவர்கள் சாதாரண மக்களாக இருந்தாலும் ஞானிகள் அவர்களை புறந்தள்ளவில்லை'** என்பதாகும் **'யாரேனும் ஒருவர் கிறிஸ்துவை அனுக வேண்டுமாயின் அதற்கு வேண்டிய ஞானம் இந்த ஞானியர்களிடம் காணப்பட்டது'. (பக்கம் 215)** அவர்கள் ஏரோது அரசனைப் போன்று ஆணவம் மற்றும் சுயநலத்தால் நிறைந்திருக்கவில்லை. ஏரோது அரசனுக்கு இவர்களை போன்று இயேசு பாலனை கண்டு வழிபட தேவை இருக்கவில்லை மாறாக தனது சொந்த நோக்கங்களை நிறைவேற்றி கொள்ளும் குறிக்கோளைக் கொண்டதாக அமைந்திருந்தது.

அன்பான சகோதர சகோதரிகளே, ஆளுனரின் உத்தரவின்படி கணக்கெடுப்பிற்காக பெத்லகேமுக்கு சென்றிருந்தவர்களால் நிறைந்திருந்த நகரில் சத்தம் மிகுந்த சூழ்நிலையும் உயர்ந்த வகுப்புக்களை சேர்ந்தவர்கள் நிறைந்துக் காணப்பட்டதால் ஆண்டவருக்கு இடமில்லாது இருந்த சத்திரங்களில் ஏற்பட்டிருந்த சனநெரிசலின் காரணத்தால் அவர்கள் மத்தியில் அவதரித்த மீட்பரை இணங்கண்டுக்கொள்ள இந்த பலம் வாய்ந்தவர்களுக்கு இயலாமற்போனது. ஆனாலும் ஆண்டவரின் குரலுக்கு திறந்த மனதுடன் செயற்பட்ட ஏழை எளியவர்களுக்கு அவரை கண்டு வழிபடவும் வானதூதர்கள் உரைத்த நற்செய்திக்கு சான்று பகரவும் முடியுமாக இருந்தது. வானதூதர் அவர்களிடம், **'அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்.'(லூக் 2:10-11) என்பதாகும்.**

## ஆழமான ஆன்மீகம்

ஆகவே, நத்தார் என்பது இறைவன் எம்முடன் இருந்து அவரது ஒரே பேறான மகனை அளவற்ற அன்பு மற்றும் பரிவிரக்கத்தின் அடையாளமாக நமக்களித்து, எமது மீட்பை குறித்து அவர் தாகமாய் இருக்கின்றார், எனும் நற்செய்தியாகும். ஆனாலும் இடையர்கள் மற்றும் கிழக்கில் இருந்து வருகைத்தந்த ஞானியர்கள் போன்று ஆண்டவரை இனங்கண்டுக்கொண்டு ஆண்டவருக்குள் வாழ்வு மாற்றத்தை அனுபவித்து உயர்ந்த வாழ்வு நிலையை நோக்கி பயணிக்க முடியும் என்பது தாழ்மையான குணமுடைய நேர்மையான மனிதர்களால் மட்டுமே ஆகும். மறு வருகையைப் போன்றதல்ல பெத்லகேமில் இடம்பெற்ற முதலாம் வருகை என்னும் இயேசுவின் பிறப்பு, மென்மையாகவும் தாழ்மையாகவும் இடம்பெற்றதாகும். ஆகவே சகோதர சகோதரிகளே, நாம் தெளிவாக அறிந்துக்கொள்வது என்னவென்றால் கிறிஸ்து பிறப்பு விழா ஆழமான ஆன்மீக நிகழ்வு என்பதாகும். அதாவது பெத்லகேமில் பிறந்த இயேசுவின் வழியாக புலப்படும் இறை அன்பை அனுபவித்தவர்களாக அவரில் உருமாற்றத்திற்காக நாம் பெற்றுள்ள அழைப்பிற்கு பதிலளித்தலாகும். அது வெளிப்புறத்தை சார்ந்த விடயம் அல்ல மாறாக, தாழ்மை மற்றும் நம்பிக்கையில் இறைவனைத் தேடி எம் உள்ளார்ந்த மனதிற்குள் நுழைவதாகும்.

ஆகவே இக்காலப்பகுதியில் சுயநலம் களைந்து இறை நம்பிக்கையோடு இறைவன் எம்மோடு இருக்கின்றார் எனத் தாழ்மையாக உணர்வதன் வழியாக உண்டாகும் உள்ளார்ந்த அமைதியை மனதில் உணரக் கூடிய காலம் இதுவே. ஏழை இடையர்கள் மற்றும் ஆண்டவரை வழிபட வந்த ஞானிகளுடன் ஆழமான நம்பிக்கையோடு பெத்லகேமில் பிறந்த இறை பாலகனை நாமும் தேடிச் செல்ல வேண்டும். தற்கால வரலாற்றில் முன்பு ஒருபோதும் ஒருகாலமும் ஏற்படாத கோவிட் - 19 சர்வதேச பரவலினால் அநேக சவால்களுக்கு



மத்தியில் ஆதரவற்று இருக்கும் இறைவனின் ஏழை மக்களோடு இந்த பிறப்பைக் கொண்டாட எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இலங்கை நாட்டைப் போன்று உலகம் முழுவதும் கோடி கணக்கான மக்களுக்கு கோவிட் - 19 சர்வதேச பரவல் ஒரு பாரிய துன்பமாகவும், ஆறுதல் அற்ற நிலையையும் கொண்டுவந்த பேரழிவாகவும் மாறி இருப்பது உண்மையானதாகும். அது எம் அனைவரின் முழு வாழ்க்கை வட்டத்தையும் தலைகீழாக மாற்றி உள்ளது. அநேகமானோர் மிகுந்த பயத்தோடும் தங்கள் தனிப்பட்ட சுதந்திரத்திற்கு தடையாக இருக்கும் தீவிர கட்டுப்பாடுகள் மத்தியில் வாழ நேரிட்டுள்ளது. எம்மில் பலர் இன்னுமாக வெளி சமூகத்தில் இருந்து விலகி வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சுதந்திரத்தை இழந்து தங்கள் அன்றாட தேவைகளை பூர்த்திப் செய்ய இயலாத நிலையில் வாழ்கின்றனர்.

## கிறிஸ்து பிறப்பு விழாவும், கோவிட் -19 சர்வதேச பரவலும்

இதனாலேயே மேற்கூறிய கிறிஸ்து பிறப்பின் மெய் பொருளை உணர்ந்து நத்தாரை கொண்டாட எமக்கு அழைப்புவிடுக்கப்பட்டிருப்பது இந்த கோவிட்-19 சர்வதேச பரவலினால் துன்புற்று இருக்கும் பின்னணியிலாகும். ஏழை குடிலில் தீவனத் தொட்டியில் தலை சாய்க்கக்கூட இடம் இல்லாமல், கடும் குளிருக்கு மூட துணிகள் கூட இல்லாமல், கந்தல் துணியால் சுற்றி, யாரும் அறிந்திராத பெத்லகேமில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த பாலகனை தேடிச் செல்வது கிறிஸ்து பிறப்பு விழாவின் பொருள் என்றால், இந்த கோவிட்-19 சர்வதேச பரவலினால் தங்கள் குடும்பத்தை சுமந்துச் செல்ல இயலாமற் துன்பப்படும் பல ஆயிரம் ஏழை மக்களிடையே தனிமை, நோய் நொடி மற்றும் பசியால் துன்புறும் **'இம்மானுவேல்'** இறைவனைத் தேடி கண்டு பிடிக்கும் கடமை இன்று எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. **'ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள், அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள், நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள், சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்' என்பர். அதற்கு நேர்மையாளர்கள் 'ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத்தேடி வந்தோம்?' என்று கேட்பார்கள். அதற்கு அரசர், 'மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததை-யெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்' என பதிலளிப்பர். (மத்தேயு 25 : 35 - 40).**

ஆகவே கிறிஸ்து பிறப்பு விழா என்பது ஆன்மீக வழிபாடு மற்றும் திருவிழா மகிழ்வை காண்பிக்கும் ஒரு வெளிவாரியான கொண்டாட்டம், அலங்காரம், பரிசுகள் பரிமாற்றம் ஆகியவை மட்டுமல்ல பாலன் இயேசுவின் வழியாக ஏழைகளைத் தேடிச்...

தொடர்ச்சி 15ம் பக்கம்




# “விடியலுக்காய் காத்திருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா”

சகோ. டிலோய்ட்சன் பெர்னாண்டோ
தேசிய குருமடம், கண்டி

> ஆன்மீக கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாட, ஆயத்தமாகியுள்ள நாம், பல வேதனைகள், சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். இந்த சவால்களை எதிர்கொள்ள இறைவன் எமக்கு தந்துள்ள ஆயுதம் தான் "பரிசுத்த விவிலியம்".

கடந்த ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை மகிழ்வுடன் கொண்டாடி மகிழ்ந்த நாம், 2020ம் ஆண்டையும் இறைவனின் ஆசீருடன் இனிதே ஆரம்பித்து எம் பாத சுவடுகளை தடம் பதித்தோம். இந்த 2020ம் ஆண்டு எப்படி கடந்து சென்றதோ தெரியாது. மிகுந்த நாட்கள் வீட்டில் தனிமைப்படுத்தலின் வழியாக எம் வாழ்வினையும் நகர்த்திச் சென்றோம். இம்மாதம் கிறிஸ்து பிறப்பு விழாவிற்காக எம்மை ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் வேளையில், இவ்வாண்டு இறைவன் “விடியலுக்காய் காத்திருக்கும் இறைமக்களாக வாழ” பாலகன் இயேசு வழியாக எம்மை இறைத்திட்டத்தில் தொடர்ந்து பயணித்திட அழைக்கின்றார். உலகமே கொரோனா தொற்று நோயினால் அவதியுறுகின்ற இவ்வேளையில் கிறிஸ்தவர்களாக எமது நத்தார் பெருவிழாவானது இவ்வாண்டு ஆன்மீக விழாவாக மக்களுக்கு எதிர்பார்த்துள்ள ஒரு விடியலின் விழாவாக அமைந்திட எமது பெருவிழாவினை சற்றே ஆன்மீக விழாவாக உருமாற்றுவோம். இவ்வாண்டு இறைவன் தம் மகனின் பிறப்பின் வழியாக உலக நாட்டு மக்களுக்கும், குறிப்பாக இலங்கை வாழ் மக்களாகிய எமக்கும் சமாதானமும், அமைதியும், விடியலையும், தந்து, எதிர்பார்த்த நீடித்த நிலையான ஒரு ஸ்தீரமான, நாளாந்த வாழ்வை கொண்டு செல்லக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவாராக.

கவலை, பதற்றம் என்பது நமது நிச்சயமற்ற தன்மை, உடல் நலம் பிரச்சினைகள், போன்றவற்றை எதிர்கொள்ளும் போது அனுபவிக்கும் மனித உணர்ச்சிகரமானது மிகவும் இயல்பானதாக இருக்கின்றது. இவை வாழ்வின் உணர்ச்சிகள். வாழ்க்கையின் சவால்களின்போது நம்பிக்கை உருவாக்குவதே கிறிஸ்து கொணர்ந்த உன்னத கொடை. காரணம் இந்த காலம் நேரம் சாதாரண நேரத்தை போன்றது அல்ல. மிகவும் விசித்திரமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமக்கு, விவிலியத்தில் உள்ள கடவுளின் அற்புதமான வாக்குறுதிகளை வாசித்து ஏற்றுக்கொண்டு உறுதியான பாதையில் பயணித்திட ஒரு அழைப்பு விடுக்கப்படுகின்றது. இந்த இக்கட்டான நேரத்தில் அமைதியை தேடுகின்றீர்களா? எங்கே அந்த அமைதி? அந்த அமைதி எங்குமில்லை, அது நம் பாலகன் இயேசுவிடம் மட்டுமே இருக்கிறது. இறைவாக்கினர்கள் முன்னறிவித்தபடி “அமைதியின் அரசர் பிறந்துள்ளார்” என்பது முழு உலகிற்கும் சொந்தமான அந்த அமைதியை கொணர்ந்த நம் இயேசு பாலகனின் பிறப்பு ஒரு ஆறுதலையும் எதிர்பார்ப்பையும் கடவுளிடமிருந்து பெற்றுத் தருகின்றது. அதை கடவுளே அருள்மாரியாக பொழிகின்றார். அவரில் நம்பிக்கை வைத்து எமது இவ்வாண்டு கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவதே இறை விருப்பம்.

இந்த கிறிஸ்து பிறப்பு விழாவில் இறைவன் தருகின்ற வாக்குறுதிகளை நினைவில் கொள்ளும் போது, எமது சாதாரண வாழ்க்கை முறையானது அமைதியில் கொண்டு செல்லப்படும். இறைவன் அருளும் வாக்குறுதியானது, பிறந்துள்ள நம் பாலகன் இயேசு வழியாக என்றென்றும் எம்மை நிலைபெற செய்கின்றார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் விடியலை எதிர்பார்த்திருக்கின்ற எமக்கு அவர் அருளுகின்ற இந்த வாக்குறுதிகளை அவருடைய மகனின் பிறப்பு விழாவினை அர்த்தமுடன் கொண்டாட வழிவகுக்கின்றது. “அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன்” (யோவா 14:27), “எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம்” (பிலி 4:6), “ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர், ஆண்டவரே அவர்களது நம்பிக்கை” (எரே 17:7), “இனி நான் மன அமைதியுடன் படுத்துறங்குவேன், ஏனெனில் ஆண்டவரே நான் தனிமையாயிருந்தேன். நீரே என்னை பாதுகாப்புடன் வாழச் செய்கின்றீர்” (தி.பா 4:8), “தீமையான செய்திகள் எதுவும் அவர்களை அச்சுறுத்தாது, ஆண்டவரில் நம்பிக்கை கொள்வதால் அவர்களது இதயம் உறுதியாய் இருக்கும்” (தி.பா 112:7), “அஞ்சாதே நான் உன்னுடன் இருக்கின்றேன்” (எசா 41:10), “உன் கடவுள் உன்னை விட்டு விலகமாட்டார், உன்னை கைவிடவும் மாட்டார்” (இ.ச 31:6), “எதிர்நோக்கை தரும் கடவுள் நம்பிக்கையால் உண்டாகும் பெருமகிழ்ச்சியாலும், அமைதியாலும் உங்களை நிரப்புவாராக” (உரோ 15:13), “உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள்” (1பேது 5:7), “மக்களே எக்காலத்திலும் அவரையே நம்புங்கள்” (தி.பா 62:8), “என் மனதில் கவலைகள் பெருகும்போது, என் உள்ளத்தை உமது ஆற்றல் மகிழ்விக்கின்றது” (தி.பா 94:19)



ஆண்டவரின் இந்த வார்த்தைகள் யாவும் உள்ளத்தை மகிழ்விக்கின்றன. இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஆன்மீக கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாட, ஆயத்தமாகியுள்ள நாம், பல வேதனைகள், சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். இந்த சவால்களை எதிர்கொள்ள இறைவன் எமக்கு தந்துள்ள ஆயுதம் தான் "பரிசுத்த விவிலியம்". இதில் அடங்கியுள்ள வார்த்தைகள் யாவும் உள்ளத்தை ஊடுருவி பாய்கின்றன. இறைவன் தனது வாக்குத்தத்தங்களின் வழியாக திடங்கொண்டு இறைவனை எம் உள்ளங்களில் வரவேற்க அழைக்கின்றார்.

ஒரு கிறிஸ்தவ பாடல் இந்த அமைதியின் அரசனின் வருகையை இவ்வாறு பாடுகின்றது.

“அமைதியின் தெய்வமே இறைவா - எம்
இதயத்தலைவனே வருவாய் அருள்வாய்
யாம் ஏங்கித் தேடுகின்ற அமைதி"..... ஆம் இவ்வாண்டு கிறிஸ்து பிறப்பு விழாவில் நாம் ஏங்கித் தேடுவது இந்த “அமைதி” தான். அமைதியின் அரசன், எம்மை வாழ்விக்கும் இறைவன் எமக்கு தருகின்ற உயர்நிலை வாழ்வினூடாக, அவருடைய அன்பு மனதில் நாம் இளைப்பாற, கவலை கொண்ட எம் இதயம் திடன் கொண்டிட, நோயுற்ற எம் உறவுகள் நலன் பெற்றிட, உடைந்த உள்ளங்கள் மீண்டும் இறைவன் பால் ஈர்ந்திட, பலனற்ற எம் உடல்கள் மீண்டும் பலம் பெற்ற, விடியலுக்காய் காத்திருக்கும் எம் உள்ளங்களுக்கு இறை இன்பம் வழங்குவாராக.

இந்த அமைதியில் இளைப்பாறவே இஸ்ராயேல் மக்களும் தமது வருகையின் நாயகர்க்காய் காத்திருந்தார்கள். அந்த காத்திருப்பு அவர்களுக்கு மீட்பரை அளித்தது. அந்த மீட்பர் அமைதியை கொணர்ந்து இஸ்ராயேல் மக்களின் வாழ்வினை மீட்டார். பலவிதமான துன்பங்களை எதிர்கொண்ட மக்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பு ஒரு நிலையான விடியலை கொடுத்தது. காரிருளில் நடந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். எம் உலகத்தின் அனைத்து மக்களும் அப்பேரொளியையே கண்பார்களாக. நாம் கொண்டாடுகின்ற இவ்வாண்டு கிறிஸ்து பிறப்பு விழா, சாதி, மதம், இனம், மொழி கடந்த நிலையான மனித உணர்வுகளை எம் உள்ளே கொண்டு வரவேண்டும். நாம் சாதி, மதம், இனம் பார்க்காமல் வாழ வேண்டும் என்பதை இந்த கொரோனா தொற்று எமக்கு பாடம் புகட்டியுள்ளது. காரணம் அது அனைத்து மனிதர்களையும் அண்டி, மனிதனை மனிதன், ஒரு மனிதனை மதித்து வாழவேண்டும் என்பதை நன்கு கற்றுக்கொடுத்திருக்கின்றது. நாம் அனைவரும் இறைவனின் மக்கள் என்பதை அது உணர்த்தியுள்ளது.

இக்காலகட்டத்தில் எமது பெருவிழாவினை ஆன்மீக ஆயத்தங்களுடன் கொண்டாடுவோர், குறிப்பாக, பிறந்துள்ள எம் பாலகன் இயேசுவின் பாதம் சென்று, இவ்வுலகத்தை ஆட்டிப்படைக்கின்ற இக்கொடிய தொற்று நோயிலிருந்து எம்மையும், எம்நாட்டு மக்களையும், உலகத்தில் வாழ்கின்ற அனைத்து மக்களையும் பாதுகாக்கும்படியாக செபிப்போம். அத்தோடு பிறந்துள்ள எம் பாலகனின் மடியில் எமது வைத்தியர்கள், தாதிமார், உதவியாளர்கள், முப்படை வீரர்கள் என எம் நாட்டு மக்களை காப்பாற்ற, தமது உயிரையும் துச்சமென கருதி பணிபுரிகின்ற அனைவரையும் ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம். **“Happy Christmas”** என்று இன்முகத்துடன் கைலாகு கொடுத்து மகிழ்கின்ற தருணம் கிடைக்காவிட்டாலும், எதிர்வாழ்வுக்காய் காத்திருக்கும் எமது **Hoplful Christmas** என்ற தொனியில் எமது நம்பிக்கையினை உறுதிப்படுத்துவோம்.

இறைவன் கொடுத்த வாக்குறுதிகளை இதயத்தில் ஏற்று, பிறந்துள்ள கிறிஸ்து பிறப்பு விழாவினை காத்திருந்த விடியல் கிடைக்கப் பெறவும் மக்களின் நாளாந்த வாழ்வு பணி தொடங்கி, மக்களின் பொருளாதார நிலை மாறி, பிறக்கவிருக்கும் புதிய ஆண்டிற்குள் ஒ புதுத்தெம்புடன் கூடிய நம்பிக்கையில் பயணம் செய்திட இவ்வாண்டு கிறிஸ்து பிறப்பு விழாவினை நம்பிக்கையின் விழாவாக்குவோம்.

உங்கள் அனைவருக்கும் பிறந்த பாலன் நம்பிக்கையை அருள்வாராக. “உங்களுக்கு நான் கொடுத்திருக்கும் வாக்குறுதியின்படி உங்களை இந்த இடத்திற்கு கொண்டு சேர்ப்பேன், ஏனெனில் உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ! அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல என்கிறார் ஆண்டவர்” (எரே 29:10-11)

★★★★★



கொள்கை வேந்தனே! குரூரம் சிந்திய தேவனே!
எழுந்தருளி வாரும்
கொடும் நோயிலிருந்து தடுப்பதற்கு குகைக்குன்றே வாரும்

# “வாரும் இறைவா! வாரும்”
# “வாரும் ஆண்டவரே வாரும்!”
# வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்!



20 மார்கழி 2020
நத்தார் சிறப்பிதழ்

ஆக்கம் : அருட்சகோதரி.
டெலா றோஸ். அ.கா

வந்தருளும் ஆண்டவரே! வருந்துவோருக்கு
வாழ்வளிக்க வந்தருளும்!
வறுமையில் வாடுவோருக்கு வளம் அளிக்க வந்தருளும்!
வசதியற்றோர் வல்லமை பெற
வன்செயல்கள் மறைந்திட வந்தருளும்
வருந்திச்சுமை சுமப்பவர்களின் சுமைகள்
தீர்ந்திட சுகமளிக்க வந்தருளும்

வாழ்வை அளிக்கும் வள்ளலே!
வாழ்வின் நிறைவாய் வந்தருளும்
வாடும் உள்ளங்களுக்கு வாழ்வளிக்க வந்தருளும்
வானமும் புமியும் வாழ்த்தி வரவேற்கின்றன வந்தருளும்
வாரும் ஆண்டவரே! தாரும் உம் தயவை
தாழ்ப்பணிந்து நிற்கின்றோம்.

விண்ணையும் மண்ணையும் இணைத்திட வாரும்
விரக்தியில் வாழ்வோர் மத்தியில் நம்பிக்கை
உதித்திட வாரும்
விதிகளை மறந்தோர் மத்தியில் விளிப்புணர்வு
வேரூன்ற வாரும்
வித்தியாசங்கள், வேறுபாடுகள் களைந்த
உலகம் உருவாக வாரும்

கல்நெஞ்சம் படைத்த உள்ளங்கள் கனிவுள்ளதாய்
மாறிட வாரும்
கருணையுள்ளம் கொண்டவர்கள்
இவ்வுலகில் பெருகிட வாரும்
கண்ணியம், கட்டுப்பாடு, கடமை, கற்பும்
சிறந்தோங்க வாரும் - கனிந்த உள்ளங்கள்
காசினியில் மலரச் செய்ய வாரும்



காக்கும் தெய்வமாக, மக்களை பராமரித்து,
பாதுகாக்க வாரும்
காசினியில் தோன்றிய கொள்ளை நோயை
களைந்திட வாரும்
காலாதி காலமும் எம்மைக் காக்க
கருணையின் தேவனே வாரும்
காருண்ணியம் நிறைந்தோங்க காக்கும்
தெய்வமாக வாரும்

பந்த பாசமிழந்தவர்களை பராமரிக்க வந்தருளும்
பக்தியில் இறை பக்தியில் இறைமக்களாய்
வாழச் செய்ய வந்தருளும்
பற்றில்லாதவர்கள் இறைபற்றுள்ளவர்களாய்
வாழ வந்தருளும்
பல கோடி மக்களையும் பரகதியில் சேர்த்திட வந்தருளும்

பாவப்பாதைகள் செம்மைப்படுத்தப்பட பள்ளத்தாக்குகள்
நிரப்பப்பட வாரும்
பாவங்கள் பெருகிய இடத்தில் உம் பாவமன்னிப்பு
பொழிய வாரும்
பாதுகாப்பற்றோரின் நிலையை பாதுகாப்பவராக வாரும்
பாமர மக்கள் உம் பிள்ளைகளாக்கப்பட பரமனே! வாரும்

பிரிவுகள், பிளவுகள், பித்தலாட்டங்கள் மறைந்திட வாரும்
பிசாசின் ஆட்சி பிளவுபட்டு பிரிந்திட வாரும்
பிற்போடப்பட்ட நற்செயல்கள் நம் நாட்டில்
தோன்றிட வாரும்
பின் தங்கிய மக்களுக்கு தேவை பூர்த்தி
செய்யப்பட வாரும்

புதிய வானம், புதிய பூமி மலர்ந்து புண்ணியங்கள்
பெருகிட வாரும்
புதியன தோன்றி, பழையன மறைந்து புதுவாழ்வு
வாழ வாரும்
புனிதர்களாக மனிதர்கள் மாறிட பூமி குதூகளிக்க வாரும்
புவி வாழ் மக்கள் மத்தியில் மகிழ்ச்சி மலர்ந்திட வாரும்

திருமகனே! தெய்வத் திருமகனே திருவருள்
பொழிய வாரும்
திக்குத்திசையெங்கும் தேவராட்சியம் வளர வாரும்
தியாகத்தின் தேவனே! தேசமெங்கும் உம் பிரசன்னம்
வர வாரும்
தினந்தோறும் தெய்வீக ஒளி பரம்பிட தேவனே வாரும்

‘கொரோனா’ நோயினால் குழம்பிய எம் நாட்டை
மீட்க வாரும்
கொள்ளை நோய் பரவாமல் குவலயம்
குணமாக்கப்பட வாரும்
கொள்கை வேந்தனே! குரூரம் சிந்திய தேவனே!
எழுந்தருளி வாரும்
கொடும் நோயிலிருந்து தடுப்பதற்கு குகைக்குன்றே வாரும்

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆



# வழமையில் ஏமாற்றம்

கிறிஸ்மஸ் என்றால் வழமையில் எல்லோர் உள்ளத்திலும் மகிழ்ச்சி பொங்கும். மார்கழி மாதம் மலர்ந்து விட்டால் இல்லச் சுத்திகரிப்பு, ஆரம்பமாகிவிடும் இல்ல அலங்கரிப்பு, பாலன்குடில், கிறிஸ்மஸ் மரம், ஆடை அணிகள் அலங்காரம் ஆயத்தம் செய்தல், கடைகள் அலங்கரிப்பால் ஆயத்தமாகி விழாக்கோலம் கொண்டுவிடும்.

இவ்வாண்டு வழமைக்கு மாறாக மக்கள் பீதியும் ஏமாற்றமும் அடையும் காலமாக மாறிவிட்டது காரணம் மனித ஆணவம். இறைவன் கொடுத்த இலவசக் கொடையான புத்தி, அறிவு ஆற்றலைக் கொடுக்கும் மூளையைத் தீய வழியில் அழிவுப் பாதையில் பயன்படுத்தி வருவதாகும்.

அன்பை விதைக்க வேண்டியவன் தன் அகங்காரத்தால் ஆணவத்தால் அழிவை விதைத்து விட்டான். கோரோன வைரஸ் நோயை அகிலமெங்கும் பரவச் செய்து அல்லோல கல்லோலப்பட வைத்துவிட்டான். ஏன் நம் நாட்டை ஆட்டங் கொள்ளச் செய்துவிட்டது. எத்தனையோ உயிர்களைக் காவுகொண்டு விட்டது இந்நோய் நம் நாடு முழுவதும் பரவி வருகிறது.

தொழிலின்றிப் பணமின்றி உண்ண உணவின்றி வாடுவோர் பலர் வெளிநாடுகளில் வேலை செய்த எம் நாட்டினர் பலர் எம்நாட்டில் வந்து தொழிலின்றி இருக்கின்றனர். எம் நாட்டுத் தலைவர்கள் சீனா தேசத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இந்நோய் தொற்றிவிடாமல் தடுக்கும் மருந்துகளைப் பெருந்தொகைப் பணம் கொடுத்து வாங்கி தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் பயன்படுத்தி கொள்வதாக தொடர்பு சாதனங்கள் மூலம் அறிகின்றோம்.

இந்நிலையில் கத்தோலிக்கராகிய எமக்கு கிறிஸ்மஸ் இவ்வருடம் ஏமாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. கிறிஸ்மஸ் அன்று ஆலயங்களில் திருப்பலி கண்டு நற்கருணை பெறமுடியுமோ என்பது சந்தேகம் இந்நோய் இன்னும் மேலதிகமாகப் பரவி விடுமோ என்ற அச்சத்துடன் வாழும் எமக்கு இயேசு பிறக்குமுன் மரியாளும் சூசையப்பரும் வீடு வீடாக அலைந்து திரிந்து கதவுகளைத் தட்டித் தங்க இடம் கேட்டு கிடைக்கவில்லை. இறுதியாக மாட்டுத் தொழுவத்தில் ஏழையாகப் பிறந்தார். இதுதான் கிறிஸ்மஸ் எனவே நாமும் ஏழ்மை விழாவாகக் கொண்டாடுவோம். உணவுள்ளோர் உணவற்றோருடன் பகிர்ந்து உண்போம். பணமுள்ளோர் பணமற்றோக்கு கொடுத்து உதவுவோம். கேளுங்கள் கொடுக்கப்படும் என்று கூறிய இயேசுவிடம் இக்கொடிய நோய் அகிலமெங்கும் இருந்து அகல அனைவரும் உருக்கமுடன் செபிப்போம்.

ஆக்கம் : அருட்சகோதரி. லூர்ஸ்
F.M.M

# இறை இயேசு பிறந்தார்

இறை இயேசு பிறந்தார் பெத்லகேம் என்ற ஊரினிலே
ஞான ஒளி ஒளிர்ந்தது மக்கள் மனதில் உலகினிலே
சந்தோஷம் எழும்பும் உலகில் உள்ள மனிதர் மனிதினிலே
முதலில் ஆயர்கள், இயேசுவைக் கண்டு மகிழ்ந்தனர்
தொழுவத்திலே!

வானதூதர் அன்று கூடினர்,
இயேசுவை மகிழ்ந்து புகழ் பாடினர்
இயேசு உதித்ததை கிறிஸ்மஸ் என்றனர் மேல்நாட்டினர்
நத்தார் திருவிழா என்றழைத்தனர்,
விழா கொண்டாடும் நம் ஊரினர்.
கிறிஸ்மஸ் என்றாலும் நத்தார் என்றாலும் குதூகலமாக
நம்மவர் கொண்டாடினர்

ஈராயிரம் ஆண்டுகள் விரைவாய் கழிந்தன மீட்பர் பிறந்து
எம்மில் எத்தனை நல் மனங்கள்
வாழுது தீமையை துறந்து
எம்மவர் விசுவாசம் மறையுது இன்று இயேசுவில் இருந்து
கொண்டாட்டம் களியாட்டம் பெருகுது
இயேசுவைப் பிரிந்து

வண்ண வண்ண புத்தாடை நிறையுது
கிறிஸ்மசுக்காய் சந்தையில்
எதைக் கண்டும் நிறையவில்லை, கிறிஸ்தவர் எம் மனதில்
‘எளிய மனத்தோர் பேறுபெற்றோர்’ இயேசு மொழி
கேட்குது நம் காதில்
எதை இயேசு சொன்ன போதிலும் ஏற்கவில்லை
எம்மவர் தித்தத்தில்

வருடத்தின் மார்கழி மாதம் கடும் குளிரின் காலம்
ஏங்குது கிறிஸ்தவர் உள்ளம், காண விழா கோலம்
மார்கழியில் கிறிஸ்மஸ் வருவதும் போவதும்
இயற்கையின் ஜாலம்
கிறிஸ்தவர்களாகி நாம் எப்போது உணர்வோம்
இறை ஞானம்

திரு. அப்சலோம், மறையாசிரியர்.




தூய சூசையப்பரை உலகளாவிய திருஅவையின் பாதுகாவலராக திருத்தந்தை 9ம் பத்திநாதர் அறிவித்ததின் 150வது ஆண்டின் நிறைவில் திருத்தந்தை பிரான்சிஸ் (**Patris Corde**) "ஒரு தந்தையின் இதயத்துடன்" என விளித்து தனது திருத்தூது மடலை வெளியிட்டுள்ளார். இதனைச் சிறப்பிக்கும் முகமாக (08.12.2020 தொடக்கம் 08.12.2021) எதிர்வரும் 2021ம் ஆண்டை "தூய சூசையப்பரின் அன்பும் கனிவும் நிறைந்த தந்தை கீழ்ப்படிவுள்ள தந்தை, கடவுளின் திட்டத்தை விருப்பத்தோடு ஏற்றுக்கொண்ட தந்தை, படைப்பாற்றல் மிக்க துணிவுள்ள, அன்புக்கு இலக்கணமான தந்தை, மகிழ்வோடு, தொழிலை மதித்து, தொழில் புரியும் தந்தை, அன்னை மரியாவையும், இயேசுவையும் நிழல்போல பாதுகாக்கும் தந்தை, என்ற ஆறு தலைப்புக்களில் தூய சூசையப்பர் பற்றி விளக்கியுள்ள திருத்தந்தை தான் 40 ஆண்டுகளுக்கு மேலாகச் செபிக்கும் செபத்தைத் தந்து வாழ்வின் சவால்களுக்கு முகம் கொடுக்க இது உதவும் என்று தந்து தனது மடலை நிறைவு செய்துள்ளதோடு நாமும் தொடர்ந்து செபிக்க ஒரு செபத்தைத் தந்துள்ளார்.

தூய சூசையப்பர் பொதுமக்களால் அதிகம் கவனிக்கப்படாத, அதேநேரம் காலமறிந்து செயற்படும் மறைவான வாழ்வு வாழ்ந்தவர். இருப்பினும் மீட்பின் வரலாற்றில் எவரோடும் ஒப்பிடமுடியாத செயல்வீரராக இருந்தவர் என்று கூறியுள்ள திருத்தந்தை யாரும் தந்தையர்களாகப் பிறப்பது இல்லை. ஒரு குழந்தையை வளர்க்கப் பொறுப்பேற்கும் போதுதான் உண்மையான தந்தையர்களாக மாறுகின்றனர் என்று இன்று எத்தனையோ பிள்ளைகள், இளையோர் தந்தையர்களால் கைவிடப்பட்டு தாயோடு தனிமையில் அங்கலாய்ப்போடு வாழ்வது கவலை தருகின்றது என்றும் கூறியுள்ள திருத்தந்தை இன்றைய நவீன உலகிற்கு தூய சூசையப்பர் சிறந்த எடுத்துக்காட்டான மனிதர் என்றும் இன்றைய உலகு சிறந்த தலைவர்களை, முதலாளிகளை, முகாமைத்துவம் மிக்கவர்களை அல்ல, மாறாக சிறந்த அன்பு செய்யும் தந்தையர்களையே எதிர்நோக்கி நிற்கின்றது என்றும் கூறியுள்ளார்.

தூய சூசையப்பரின் ஆண்டைப் பிரகடனப்படுத்தி திருத்தந்தை முன் வைத்த ஆறுவிடயங்களையும் அவரது வாழ்க்கை வரலாற்றையும் எதிர்வரும் "ஞான ஒளியில்" தொடராக எழுதவுள்ளேன். வாசித்துப் பலன் பெறுவீர்கள் எனவும் எண்ணுகின்றேன்.

## கிறிஸ்மஸ் ஒளியை அணைக்கும் வல்லமை எந்தவொரு வைரசுக்கும் கிடையாது – திருத்தந்தை



வருடாவருடம் வத்திக்கான் சதுக்கத்தில் நிறுவப்படும் கிறிஸ்மஸ் மரத்தையும், குடிலையும் திறந்து வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இப்போது உலகெங்கும் சிறுவர் முதல் வயோதிபர் வரை கிறிஸ்மஸ்....

தொடர்ச்சி 15ம் பக்கம்

## தூய சூசையப்பரின் யூபிலி ஆண்டிற்கான செபம்

மீட்பரின் பொறுப்பாளரே! தூய கன்னி மரியாளின் துணையாளரே வாழ்க! கடவுள் தனது ஒரே திருமகனை உம்மிடமே ஒப்படைத்தார். உம்மிலே தூய கன்னி மரியாள் முழு நம்பிக்கையையும் கொண்டிருந்தார். உம்முடைய உதவியால் கிறிஸ்து மனிதரானார். எங்களுக்கும் உமது தந்தைக்குரிய பண்பைக் காட்டி வாழ்வின் பாதையில் வழிநடத்தியருளும். எமக்கு அருளையும், இரக்கத்தையும், மனஉறுதியையும் பெற்றுத்தாரும் அனைத்து தீமைகளில் இருந்தும் பாதுகாத்தருளும். ஆமென்.

# 2021ம் ஆண்டை தூய சூசையப்பரின் யூபிலி ஆண்டாக திருத்தந்தை பிரகடனப்படுத்தியுள்ளார்

## (08.12.2020 - 08.12.2021)



ஆக்கம். அருட்சகோ.
R. ஜோசப் ஜெயகாந்தன்.

**தூய சூசையப்பரின் ஆசீர்வாதங்களை தூய சூசையப்பரின் யூபிலி ஆண்டிலே திருஅவையினால் வெளியிடப்பட்டுள்ள 15 விடயங்கள் பின்வருமாறு:–**

01. ஒரு நாள் ஆன்மீகத் ஞானவொடுக்கத்தில் ஈடுபடுதல் அதிலே தூய சூசையப்பர் பற்றிய தியானம் இடம்பெறவேண்டும்.
02. வேலையற்றோருக்காக தூய சூசையப்பரின் பரிந்துரையை வேண்டி மன்றாடி, நிரந்தரமான வேலையைப் பெற்றுக்கொடுத்தல்.
03. துன்பப்படும் கிறிஸ்தவர்களுக்காக தூய சூசையப்பரின் பிரார்த்தனையைச் செபித்தல்.
04. தூய சூசையப்பரின் பாதுகாப்பை நாடி ஒருவருடைய அன்றாட, நாளாந்த வேலையை ஒப்புக்கொடுத்தல்.
05. தூய சூசையப்பரின் முன்மாதிரிகையைப் பின்பற்றி பின்வரும் உடலியல் இரக்கச் செயற்பாடுகளைச் செய்தல். பசித்தவர்களுக்கு உணவளித்தல், தாகத்தில் இருப்பவர்களுக்கு குடிக்கத் தண்ணீர் கொடுத்தல், ஆடை அற்றவர்களுக்கு ஆடை கொடுத்தல், திக்கற்றவர்களுக்கு இருக்க அடைக்கலம் கொடுத்தல்.
06. தூய சூசையப்பரின் முன்மாதிரிகையைப் பின்பற்றி பின்வரும் ஆன்மீக இரக்கச் செயற்பாடுகளைச் செய்தல், துன்பப்படுபவர்களுக்கு ஆறுதல் கூறுதல், சந்தேகப்படுபவர்களுக்கு ஆலோசனை வழங்குதல், அறிவுரை கூறுதல், பாவிகளுக்கு இரக்கம் காட்டுதல், தவறுகளை ஏற்றுக்கொள்ளல், பாவங்களை பொறுமையாக ஏற்றுக்கொள்ளுதல், தவறுகளை மன்னித்தல், உயிரோடு இருப்பவர்களுக்கு இறந்தோருக்காகவும் செபித்தல்.
07. திருக்குடும்பத்தில் காணப்பட்ட ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஏற்பட குடும்பமாக ஒருவருடைய குடும்பத்தில் செபமாலை சொல்லுதல்
08. திருமண ஒப்பந்தம் செய்யப்பட்ட தம்பதியர்களும் ஒன்றாக செபமாலை செபிப்பதன் மூலம் இறைவனின் ஆசீர்வாதங்களைப் பெறுதல்.
09. பரலோக மந்திரத்தை குறைந்தது 30 நிமிடங்கள் தியானித்து இறைவனுக்கும் தூய சூசையப்பருக்கும் இடையிலான உறவை, நம்பகத்தன்மையைப் புதுப்பித்து இறைவனின் விருப்பத்தை அறிந்து அதற்கு கீழ்ப்படிந்து நடக்க முயற்சித்தல்.
10. நத்தார் தினத்திற்குப் பிறகு வரும் ஞாயிற்றுக்கிழமையில் பைசன்ரைன் கத்தோலிக்க பாரம்பரியத்தின் படி தூய சூசையப்பரின் அங்கீகரிக்கப்பட்ட செபத்தைச் சொல்லுதல்
11. தூய சூசையப்பரை நினைவுகூர்ந்து பங்குனி மாதம் 19ம் திகதி சூசையப்பரின் திருநாளை விமரிசையாகக் கொண்டாடுதல்.
12. வருடத்தின் ஒவ்வொரு மாதத்திலும் வரும் 19ம் திகதி தூய சூசையப்பரின் அங்கீகரிக்கப்பட்ட செபத்தைச் சொல்லுதல்
13. தூய சூசையப்பருக்கு பாரம்பரியமாக ஒதுக்கப்பட்டிருக்கும் புதன்கிழமையில் பக்திச் செயற்பாட்டை அல்லது அங்கீகரிக்கப்பட்ட செபத்தைச் சொல்லுதல்
14. மார்கழி மாதத்தில் வரும் 29ம் திகதியில் திருக்குடும்பத்தின் திருநாளின் போது சூசையப்பரின் பரிந்துரையை நாடி மன்றாடுதல்
15. வைகாசி மாதம் 1ம் திகதி தொழிலாளர்களின் பாதுகாவலரான தூய சூசையப்பரின் திருநாளை பக்தியோடு விமரிசையாகக் கொண்டாடுதல்.

# தூய சூசையப்பர் யூபிலி ஆண்டு 2021



புனித சூசையப்பரை உலகளாவிய திருஅவையின் பாதுகாவலராக திருத்தந்தை 9ம் பத்திநாதர் அறிவித்ததன் 150வது ஆண்டு நிறைவில் எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்

**'Patris Corde" "ஒரு தந்தையின் இதயத்துடன்"**

என விழித்து திருத்தந்தை தமது திருத்தூது மடலை வெளியிட்டுள்ளார். இக்காலத்தை சிறப்பிக்கும் முகமாக 08.12.2020 முதல் 08.12.2021 வரை

**"புனித சூசையப்பர் ஆண்டு"**

எனப் பிரகடனப்படுத்தியுள்ளார்.



# இயேசு கிறிஸ்துவின் திருக்குடும்பம்

**ஒருவர் சமுதாயத்தில் சிறந்தவராக இருக்கின்றார் என்றால் அதற்கு அடிப்படையில் அவர் குடும்பத்தையே முதலில் பாராட்ட வேண்டும்.**




# சிறந்த குடும்பத்திற்கான அடித்தளம்.

**கத்தோலிக்கத் திருச்சபை எதிர்வரும் 27ம் திகதி திருக்குடும்பத் திருநாளைக் கொண்டாடுகிறது.**

குடும்பம் ஒரு கோயில். குடும்பம் ஒரு பல்கலைக்கழகம், குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை என்றெல்லாம் அழைக்கப்படுவதை கேட்டிருக்கின்றோம். குடும்பம் என்ற நிறுவனத்தின் நோக்கம் நிகழ்கால நிம்மதி எதிர்கால பாதுகாப்பு ஏற்பாடு இந்தத் தலைமுறையின் வசதியோடு எதிர்காலத் தலைமுறைக்கான அன்பு, அரவணைப்பு உத்தரவாதம் ஆகிய அனைத்துமே நல்ல குடும்பத்தில் கிடைக்கிறது. நிகழ்கால இன்பம் மட்டுமே விரும்புவோர் இடுத்த தலைமுறை பற்றிய அக்கறை இம்மியும் இல்லாதவர்கள் என்று சுகிசிவம் என்ற எழுத்தாளர் “நல்ல குடும்பம் நமது இலட்சம்” என்ற தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையில் அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே” என்ற திரை இசைப் பாடல் ஒன்று கூறுகின்றது. ஒருவர் சமுதாயத்தில் சிறந்தவராக இருக்கின்றாரென்றால் அதற்கு அடிப்படையில் அவர் குடும்பத்தையே முதலில் பாராட்ட வேண்டும். ஒரு தாய் ஆயிரம் தலைமையாசிரியருக்கு சமம் என்பார்கள். நபிகள் நாயகத்தின் பேரன்கள் இருவர் சின்ன மனஸ்தாபம் காரணமாக பேசாமல் இருந்துவிட்டார்கள். இதைப் பார்த்த தாய் பாத்திமா “மனஸ்தாபம் காரணமாக ஒருவர் மற்றவரோடு மூன்று நாட்களுக்கு மேல் பேசாமல் இருந்தால் அது அவரைக் கொலை செய்வதற்கு ஒப்பாகும்” என்று உங்கள் பாட்டனார் சொல்லியிருக்கின்றார் என்று அவர்களிடம் சொன்னார். இளையவன் சொன்னான் அம்மா அப்படிப் பேசாமல் இருக்கிற இரண்டு பேரில் எவர் முதலில் பேசுகின்றாரோ அவருக்கே பலன் உண்டு என்னும் தாத்தா சொல்லியிருப்பது எனக்குத் தெரியும். அதனால் அந்தப் பலன் அண்ணாவுக்குக் கிடைக்கட்டும் என்ற எண்ணத்தில் தான் நான் முதலில் பேசாமல் இருந்தேன் என்றான். இதைக் கேட்ட அண்ணன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வர உடனே தம்பியை கட்டி அணைத்தான். இப்படிப்பட்ட நல்ல மதிப்பீடுகளை, பக்குவத்தை குடும்பத்தை தவிர வேறெங்கும் கற்றுக்கொள்ள முடியாது. இப்படி குடும்ப சூழ்நிலையில் பெற்றுக்கொள்கிற பாடம் தான் சமுதாய நலனுக்கு அடித்தளமாக அமைகிறது. இப்படிப்பட்ட பண்புகள் சமுதாயத்தில் பல நல்ல பாதிப்புக்களை உருவாக்குகின்றது. சமுதாயத்தில் யாராக இருந்தாலும் அவர்களது நிலை நல்ல நிலையாக இருந்தாலும் அல்லது கேடுற்ற நிலையாக இருந்தாலும் இதற்கு அவர் பிறந்து வளர்ந்த சூழ்நிலையாகிய குடும்பத்திற்கு பெரும் பங்கு உண்டு. இதையாரும் மறுக்க முடியாது. ஒரு தந்தை குழந்தைகளை நல்ல நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்று நினைத்துப் பாடுபட்டால் அவரின் அடுத்த தலைமுறை செழிப்பாகவே இருக்கும். இது பொதுவாகவே நாம் காணும் அனுபவமாகும். ஒரு குடும்பத் தலைவர் அன்றாடம் குடித்துக்கொண்டு குடும்பத்தைக் கவனிக்காமல் இருந்துவிட்டால் பிள்ளைகள் குறிப்பிட்ட காலவரையில் எட்டிப்பிடிக்க வேண்டிய வளர்ச்சியை மிகுந்த போராட்டத்தோடு தாமதமாக எட்டிப் பிடிப்பார்கள்.

அடிப்படையில் பார்க்கப்போனால் குடும்பங்களில் குழந்தைகளுடன் பெற்றோர்கள் நேரத்தை செலவழிப்பது மிக மிகக் குறைவாக இருக்கிறது. குழந்தைகள் பிற்காலத்தில் நன்றாக இருக்கவேண்டும் என்று ஏராளமாக சம்பாதித்து வைத்து என்ன பயன்? பிள்ளைகள் சொகுசாக வாழவேண்டும் என்று நாம் எடுக்கிற முயற்சி பிற்காலத்தில் அவர்களில் துன்பத்தை தாங்கிக் கொள்ளும் ஆற்றலை முடமாக்கி விடுகிறது. குழந்தைகளுக்குப் பணத்தை செலவழிப்பதைவிட நேரத்தை செலவழிப்பது மிக மிக முக்கியம். பெற்றோர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் என்ன என்று பிள்ளைகளும் அறிவது மிக முக்கியமானது.

பெற்றோர்கள் அவற்றை எப்படிப் போராடி வெல்லுகின்றார்கள் என்ற பயிற்சி குடும்பத்தில் பிள்ளைகளின் மனதில் பதியவேண்டும். திருக்குடும்ப விழாவை சிறப்பிக்கின்ற இந்த நாளிலே திருக்குடும்பம் குடும்ப வாழ்வுக்கு சிறந்த உதாரணமாக அமைகிறது. இயேசு கிறிஸ்து கடவுள் தன்மையும் மனித தன்மையும் கொண்டிருந்தாலும் நல்ல பண்புகளை தனது பெற்றோர்களாகிய யோசப்பு மரியாவிடமிருந்து கற்றுக்கொண்டார் என்றால் அது மிகையல்ல. தன் இறைப்பணிக்குத் தேவையான கடின உழைப்பை யோசேப்பிடமும் இறைத்தன்மையை வலிந்து பற்றிக் கொண்டிருக்காமல் தாழ்ச்சியோடு இருப்பதை மரியாளிடமும் கற்றுக்கொண்டார் என்பதை இத்திருக்-குடும்ப விழாவானது எமக்குச் சொல்லித் தரும் பாடமாகும். இறையாட்சியை இயேசு கட்டியெழுப்ப ஒரு திருக்குடும்பம் அடித்தளமாக அமைந்ததென்றால் ஒரு ஆரோக்கியமான சமுதாயம் அமைய ஏன் நம் குடும்பங்கள் அடித்தளமாக இருக்கக் கூடாது.

**ஆக்கம். திரு. அம்புறோஸ் பீற்றர்**

## இறைவனின் தாய் தூய கன்னிமரியாள் [01.01.2021]

**வாசக விளக்கம்:** புத்தாண்டின் முதல் நாளான இன்று இறைமக்களாகிய நாம் அனைவரும் திருஅவையோடு இணைந்து தூய கன்னி மரியா இறைவனின் தாய் என்ற பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். மரியன்னை இறைவனின் தாயாக மட்டுமன்றி நம்முடைய தாயாகவும் இருக்கின்றாள். ஏனெனில் இறைவன் நமக்குக் கொடுத்த மாபெரும் கொடைதான் அன்னை மரியாள். கடந்த வருடத்தில் நாம் மாபெரும் துன்பத்தைக் கடந்து வந்திருக்கின்றோம். பிறந்துள்ள புத்தாண்டில் நோயின் துன்பம் நீங்கி மகிழ்ச்சியுடன் வாழ மரியன்னையின் பரிந்துரையோடு வேண்டுவோம். எமது வாழ்க்கைப் பயணத்தில் நாம் பொறுமை, அன்பு, தியாகம், நல்ல சிந்தனை, கடின உழைப்பு இவைகளில் நாட்டம் கொண்டவர்களாக வாழ உறுதியெடுப்போம். நாம் அனைவரும் அன்னை மரியாளைப் போல் கடவுளின் பார்வையில் மதிப்புள்ளவராக நடக்க முயற்சிப்போம். மரியாவைப் போல் “இதோ நான் ஆண்டவரின் அடிமை, உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்று முழுமையாக இறைதிட்டத்திற்கு ஒப்புக்கொடுப்போம். நம்பிக்கையோடு ஒருவருக்கொருவர் புத்தாண்டின் மகிழ்ச்சியை பகிர்ந்து வாழ்வோம்.

**முதல் வாசகம் : எண்ணிக்கை 6:22–27**

இஸ்ராயேல் மக்கள் மீது நமது பெயரைக் கூறி நீங்கள் வேண்டும்போது, நாம் அவர்களுக்கு ஆசி அளிப்போம்.

**பதிலுரைப் பாடல் :**

கடவுளே எம்மீது இரங்கி, எமக்கு ஆசீ வழங்குவீராக.

**இரண்டாம் வாசகம் : கலா 4:4–7**

கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா, அல்லேலூயா! பலமுறை பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 2:16–21**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைவன் கிருபையால் நமக்கு வழங்கப்பட்டிருக்கும் 2021 என்ற புதுவருடத்தின் முதல் நாளிலே தூய மரியாள் இறைவனின் தாய் என்ற பெருவிழாவை வாஞ்சையுடன் கொண்டாட வந்திருக்கும் உம் அன்புப் பிள்ளைகளாகிய எங்களை ஆசீர்வதிக்கவும், உம்முடைய அருள் ஆற்றல் அனைத்தையும் இவ்வருடம் முழுவதும் அன்னை மரியாளின் பரிந்துரையோடு இயேசுவின் கரங்கள் வழியாய் எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று...

ஆண்டவர் பெயரால் ஆசி பெற வந்திருக்கும் எமது திருஅவையையும் நாட்டையும் மக்கள் அனைவரையும் நிறைவாக வழிநடத்தவும், தனது வாழ்வில் தாழ்ச்சியை அணிந்து கொண்ட அன்னை மரியாளை முன்மாதிரிகையாக கொண்டு சுயநலம் அற்றவர்களாய் பொதுநலம் பேணி அனைவரும் அன்பிலும் ஒற்றுமையிலும் சமாதானத்திலும் நிலைத்து வாழவும் வேண்டிய வரங்களை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று...

ஆண்டவர் நம்மோடு இருக்கின்றார் என்பதை உணர்ந்தவர்களாக அவரது விருப்பத்தையே சிந்திப்பவர்களாக கடந்த வருடம் முழுவதும் நாம் அனுபவித்த துன்பதுயரங்களும் கொடிய நோயும் கடந்து போகும் என்ற நம்பிக்கை கொண்டவர்களாக, இறைத்திட்டத்தை ஏற்று வாழ்ந்த அன்னை மரியாள் வழியாக செபிப்பவர்களாக நாம் வாழவும், மரியாவைப் போன்று கடவுளின் பார்வையில் மதிப்புள்ளவராக “இதோ நான் ஆண்டவரின் அடிமை. உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்ற நம்பிக்கையோடு வாழவும் வேண்டிய வரங்களை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று...







# கொண்டாடுவோம் குழந்தைகளை

**மாசில்லாக் குழந்தைகள் தினம் - மார்கழி 28**

“குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று” என்று சொல்வார்கள். இது ஒவ்வொரு குழந்தையும் இறைமையைத் தனக்குள் முழுமையாய்க் கொண்டுள்ளது என்பதைச் சுட்டுகிறது. குழந்தைகள் மாசுமருவற்றவர்கள், அப்பாவிகள், எவ்வுயிருக்கும் தீங்கு நினையாதவர்கள், கள்ளம் கபடற்றவர்கள், இளகிய மனம் கொண்டவர்கள், இப்படியும் அடுக்கிக் கொண்டே போகலாம் குழந்தைகளின் குணங்களை. இதனால்தான் குழந்தைகளை இறைவனுக்கும், இறைத்தன்மைக்கும் ஒப்புமையாகப் பயன்படுத்துகின்றனர். வங்கக் கவிஞர் தாகூர் குழந்தைகளை இப்படியாகக் குறிப்பிடுவார்.

“ஒவ்வொரு குழந்தையும் கடவுள் இவ்வுலகிற்கு எழுதும் ஒரு அன்புக் கடிதம்”. ஆம்! குழந்தைகள் கடவுளின் அன்பின் கடிதங்கள். இறையன்பின் இவ்வுலகிற்கு சுமந்து வரும் பெட்டகங்கள் அமைதியின் தூதுவர்கள், கடவுளின் காதல் காவியங்கள். எத்தனை எத்தனை சிறப்புக்கள் இந்த சின்னஞ்சிறு சிட்டுக்களுக்கு. ஆனால், இன்றைய அறிவியல் உலகில் இவர்களின் நிலை என்ன என்பது ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றும் அசிங்கப்பட வேண்டிய ஒன்றுமாய் இருக்கிறது என்பது கண்கூடு.

## நவீன ஏரோதுக்கள்

அன்று தன்னுடைய ஆட்சிக்கும் அரசுரிமைக்கும் ஆபத்து ஒரு குழந்தையின் வழியாக வரவிருப்பதை எண்ணி அச்சமுற்று எண்ணற்ற பச்சிளம் குழந்தைகளை கொன்றழித்தான் ஏரோது. இன்றும் நாம் வாழும் சமுதாயத்தில் பல வகையாக “ஏரோதுகள்” உலவி வருகிறார்கள். வலுப்பெற்றவரின் துன்பத்தில் மகிழும், துன்புறுத்தி மகிழும் மக்களைக் கொண்ட உலகம் இது. அதிலும் குறிப்பாக இன்றைய சமூகத்தில் பலம் இல்லாதவர்களாய், வலுப்பெற்றவர்களாய், தங்கள் உரிமைகளுக்காக தாங்களே குரல் கொடுக்க இயலாதவர்களாய் இருக்கக் கூடியவர்கள் குழந்தைகள்.

இந்த அப்பாவி குழந்தைகள் சமூகத்தில் சுயநலக் கயவர்களின் கைகளில் சிக்குண்டு, நாளும் அல்லலுறும் நிலைமை சொல்லில் அடங்கா. கருவில் உள்ள சிசு தொடங்கி பள்ளி செல்லும் மழலை வரை எல்லாக ’குழந்தைகளும், இன்று ஏதோ ஒரு வகையில் சமூகத்தால் துன்புறுவதும், தவறாகப் பயன்படுத்தப்படுவதும் நாளும் நடந்தேறி வருவது நாம் அறிந்த உண்மையே. அன்று ஏரோது செய்தது எவ்வளவு பெரிய தவறோ, அதைவிடப் பன்மடங்கு பெரியதாய் இருக்கிறது. இன்றைய ஏதோதுகளின் கொடுமையும், கொடூரமும் எத்தனை வகையாக ஏரோதுகள் இன்று நல்லவர்களைப் போல் நடமாடி வருகிறார்கள்? கருவில் சிசுக்கள் எவ்வளவு மென்மையானவர்கள்? இவர்கள் செய்த பிழைதான் என்ன? இவர்களைக் கொடூரமாய் கொன்றழிக்கும் பாதகச் செயலை ஏற்றுக்கொள்ளும், நியாயப்படுத்தும் சமுதாயத்தை என்ன சொல்லி சபிப்பது, சாடுவது? வெறும் உடல் சுகத்திற்காக உடலுறவு கொண்டுவிட்டு கருவை வெகு சாதாரணமாய் கலைத்துவிட்டு திரியும் பெண்களும், ஆண்களும் நவீன ஏரோதுக்கள். பெற்ற பிள்ளையை குப்பைத் தொட்டியில் தூக்கி வீசும் தரங்கெட்ட தாய்மார்கள் புதுவித ஏரோதுகள். பணத்திற்காக கண்மூடித்தனமாய் கணக்கில்லாமல் கருக்கலைப்பு செய்யும் மருத்துவர்கள் மானங்கெட்ட ஏரோதுகள். தாய்ப்பால் தந்தால் தன்னுடைய அழகு போய்விடுமென பயந்து புட்டிப்பாலை குழந்தைகளுக்குப் புகட்டும் கேவலமான தாய்மார்கள் அருவருக்கத்தக்க ஏரோதுகள். பணத்திற்காக குழந்தைகளை திருடும், விற்கும், கொல்லும் செவிலியர்கள், பெற்றோர்கள், மற்றவர்கள் இவர்கள் கூட நவநாகரீக ஏரோதுகள்.

குழந்தைகள் அன்பு செய்யப்பட வேண்டியவர்கள், கொண்டாடப்பட வேண்டியவர்கள், அரவணைக்கப்பட வேண்டியவர்கள். ஆனால், இன்றோ குழந்தைகள் தொல்லைகளாக, பொருட்களாக எண்ணப்படுவதும், ஏளனமாய் நடத்தப்படுவதும் நிதர்சனம். பள்ளிக்குச் சென்று கல்வி பயில வேண்டிய குழந்தைகளை வேலைக்கு அமர்த்தும் முதலாளிகள், பெற்ற மகளையே பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கும் அப்பாக்கள், மழலைகளை பிச்சையெடுக்க வைக்கும் சமூக விரோதிகள். குழந்தைகளைக் கடத்தி உடல் பாகங்களைத் திருடும் கயவர்கள், உறவினர்களிடம் பாசத்தை எதிர்பார்த்து பழகும் குழந்தைகளை தங்கள் இச்சைக்குப் பலியாக்கும் காமுகர்கள். இப்படி எக்கச்சக்கமாக ஏரோதுகள் அலையும் சமூகம் இது, இந்த நவீன ஏரோதுகளால் பாதிக்கப்பட்டுள்ள இக்காலத்து மாசில்லாக் குழந்தைகளை எப்படி அணுகுகிறோம். வெறுமனே மார்கழி 28ல் மாசில்லாக் குழந்தைகள் தினத்தை திருப்பலியில் கொண்டாடிவிட்டால் நம் கிறிஸ்தவ கடமை முடிந்துவிடுமா?

## குழந்தை வளர்ப்பு

நம்முடைய சூழலில் பாதிக்கப்பட்டுள்ள மாசில்லா குழந்தைகளுக்கு நாம் என்ன செய்யப்போகின்றோம்? நம்முடைய பாதுகாப்பிலும், பொறுப்பிலும் இருக்கும் குழந்தைகளை எந்த முறையில் நடத்துகின்றோம்?



இன்றைய குழந்தைகள் வளர்ப்பில் நம்முடைய பங்கு முக்கியமானது. நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வழியில் எங்கோ எப்படியோ குழந்தைகளோடு தொடர்பில் இருக்க வேண்டியுள்ளது. இச்சூழலில் நாம் அவர்களிடம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பது சிந்திக்கப்பட வேண்டியது. இறுதியாக ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**“அவமானப்படுத்தப்படும் குழந்தை குற்றவாளி ஆகின்றது. கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்தோடு வளர்கிறது. குறைகூறி வளர்க்கப்படும் குழந்தை வெறுக்கக் கற்றுக்கொள்கிறது. அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக்கொள்கிறது”**

எனவே குழந்தைகளை வளர்ப்பதில் கவனம் தேவை. அவர்களின் எதிர்காலம் முழுமையும் குழந்தைப் பருவத்திலேயே வடிவமைக்கப்படுகிறது. இன்று அவர்களைக் கருத்தாய்ப் பேணி வளர்த்தால் வருங்காலம் அவர்களுக்கு வளமானதாய் இருக்கும்.

### திருத்தந்தையின் செய்தி...

**‘ஆண்டவராகிய இயேசுவே வாரும், குழம்பிய எங்கள் இதயங்களை விழிப்புடன் இருக்கச்செய்யும், செபிக்கும் ஆவலையும், அன்புகூர்வதன் தேவையும் எங்களில் உருவாக்கும்’**




## 01 இலங்கை கத்தோலிக்க...

கொண்டவன் என்ற உண்மை மனித இயல்பாகும். திருத்தந்தை மனித மாண்பு பற்றியும் சகோதரத்துவம் பற்றியும் நற்செய்தியில் இயேசு வெளிப்படுத்தும் ஆழமான உண்மைகளை வெளிப்படுத்துகின்றார். (**Fratelli Tutti 213**) இது உலகளாவிய முழு மனித குடும்பத்தினதும் சமூக உறவுக்கு வழிகோலுகின்றது. இது எம்மனைவருக்குமான அழைப்பு என திருத்தந்தை வலியுறுத்துகின்றார். இக்கொடிய தொற்றுநோய் மத்தியில் கிறிஸ்மஸ் கொண்டாதுவது எம்முன் திணிக்கப்பட்டதோ அல்லது கற்பனையானதோ அல்ல. மாறாக எல்லோருடைய மனித மாண்பையும் மதிக்கின்ற ஒரு கொண்டாட்டமாகும் (**Fratelli Tutti 277**)

எனவே எமது அழைப்புக்கு ஏற்ப நாம் துன்புறுவோர் ஏழைகள் குழந்தைகளுக்காக எமது இதய வேண்டுதல்களை இறைவனை நோக்கி உயர்த்துவோம். ஏழைகளின் உள்ளங்களில் நினைவிற்கொண்டு எமக்குள்ளவற்றை இயன்றளவு பகிர்ந்து வாழ்வோம். எம் முன்னுரிமைக் கடமையாக பாதிக்கப்பட்டு நீதிக்காக ஏங்கும் அனைவரோடும் செபத்தில் ஒன்றித்திருப்போம். எல்லா இறை மக்களுக்கும் நல்மனம் கொண்ட அனைத்து மக்களுக்கும் கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

## 03 துயர் நிறைந்த...

பின்னணியில், திருமணமாகுமுன் கருவுற்றிருந்த மரியா, அவரைத் தொடக்கத்தில் ஏற்கத் தயங்கிய யோசேப்பு, அவர்கள் சமூகத்தில் எதிர்கொண்ட சிக்கல்களை நோக்கலாம். பாலகன் இயேசு பிறந்தபின், அச்செய்தியைக் கேட்டுப் பாலனைக் கொல்லத் தேடிய ஏரோது மன்னனின் அதிகார வெறிக்குப் பலியான மாசுமறுவற்ற குழந்தைகளின் உயிர்களும், அச்சூழலில் வாழ்ந்த மக்களின் உணர்வுகளும், பாலனைக் காப்பாற்ற எகிப்திற்கு தப்பிச் சென்ற மரியாளினதும், யோசேப்பினதும் மனநிலையும் கலக்கமுற்றதாகவும், அச்சம் நிரம்பியதாகவுமே காணப்பட்டன. இவ்வாறன சூழ்நிலையில் தான் இறைவாக்கினர் எசாயா கூறியவாறு “காரிருளினில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். சாவின் நிழல் சூழ்ந்த நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது” (9:2) என்ற வாக்கை நிறைவேற்றுமாறு உலகுக்கு மீட்பின் பேரின்பத்தைக் கொணர்ந்த இயேசுவின் பிறப்பு நிகழ்ந்தது.

இறைவார்த்தையின் ஒளியில் உற்றுநோக்குகையில், இன்றைய சமுதாய சூழ்நிலையில் கிறிஸ்து பிறப்பு நிகழ்வை நினைவுகூரும் எமக்கு இச்சிறிது காலத்தில் நாம் படும் துயர்கள் இறைவனின் மாட்சியின் வெளிப்பாட்டின் பொட்டு பெருமகிழ்ச்சியாக மாறும் என்ற நம்பிக்கையோடு பயணிக்க வழிகாட்டியாக அமைகின்றது. “உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்” (யோவான் 16:20) என்ற நம் ஆண்டவரின் நற்செய்தியின் வெளிப்பாடாக, நாம் இறைவன் மேல் கொண்ட நம்பிக்கையின் ஒளியானது எம்மை இந்தத் துயர் நிறைந்த வாழ்விலிருந்து மீட்கும் அடிச்சுவடாக அமைகின்றது. வறுமை, பட்டினி, அன்பில்லா நிலை, ஆதரவற்ற நிலை, பராமரிப்பின்மை எனும் துயர் நிறைந்த வாழ்வில் சொந்த உடமைகளை இழந்து, இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்ட ஒவ்வொரு குடும்பங்களினதும் துயரத்தில் எமது செபங்கள் மற்றும் அவர்களுக்கு எம்மால் செய்யக்கூடிய சிறுசிறு உதவிகளால், நாம் அனைவரும் உடன்பிறப்புக்கள் ஆவோம். மேலும் எம் திருத்தந்தை பிரான்சிஸ் தமது “அனைவரும் உடன்பிறந்தோர்” (**Fratelli Tutti**) எனும் திருமடலில் கூறியுள்ளது போன்று, உலகெங்கும் பாகுபாடின்றிப் பரவியுள்ள கோவிட் - 19 கொள்ளை நோயின் தாக்கத்தினால் சீர்குலைந்த எமது சமுதாயத்தில் காலத்தின் தேவையறிந்து, இறைவனால் படைக்கப்பட்ட நாம் அனைவரும் சமமென உணர்ந்து செயற்படுவோம். எம் அயலவரை அவரவர் குறை நிறையறிந்தவர்களாய் அன்பு செய்வோம். சக மனிதரில் இறைவனைக் காண்போம். அதுவே இன்றைய துயர்நிறைந்த எம் சமுதாயத்தில் கிறிஸ்து பிறப்பு எமக்குக் கொண்டுவரும் நற்செய்தி ஆகும்.

## 12 கிறிஸ்மஸ் ஒளியை...

மரங்களை அலங்கரிப்பதிலும், கிறிஸ்மஸ் குடி அமைப்பதிலும் மகிழ்ச்சியோடு ஈடுபட்டு வருகிறார்கள். எந்தவொரு தீமையாலும் கிறிஸ்மஸ் ஒளியை அணைக்க முடியாது என்பதையே இது காட்டுகிறது.

ஏனெனில் கிறிஸ்மஸ் என்பது நம்பிக்கையின், எதிர்நோக்கின் உன்னத நிகழ்வு, எந்தத் தீமைக்கும் முடிவுண்டு, விடிவுண்டு என்பது தான் கிறிஸ்து மனிதனாக வந்ததன் அர்த்தம் என்று குறிப்பிட்ட திருத்தந்தை, நம்பிக்கையோடு கிறிஸ்துவை வரவேற்க ஆயத்தமாகுமாறு அழைப்பு விடுத்தார்.

ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு நாடுகளிலிந்து கிறிஸ்மஸ் மரம் வத்திக்கான் சதுக்கத்துக்குக் கொண்டு வரப்பட்டு நடப்படுவது வழக்கமாகும். இவ்வருடம் ஸ்லவேனியா குடியரசு நாட்டிலிருந்து இம்மரம் கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 09 கிறிஸ்து பிறப்பு...

சென்று அவர்களுடன் கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாட உள்ளார்ந்த மன மாற்றத்திற்கு எம்மை அழைத்து செல்லும் ஆன்மீக நிகழ்வாகும்.

விசேட விதமாக இத்தகைய காலப்பகுதியில் இந்த தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் வழியாக பெத்லகேமில் பிறந்த இறை பாலனை கண்டுக்கொள்ளும் பாரிய ஆசையோடு நாம் இருக்க வேண்டும். எமது சகோதர சகோதரிகளில் பலர் ஏழ்மை பயம் மற்றும் பாதுகாப்பு இன்றி துன்புறும்போது எங்களால் மகிழ்ச்சியாக கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாட இயலாது. இம்முறை கிறிஸ்து பிறப்பு விழா கடந்த வருடங்களைப்பார்க்கிலும் ஆன்மீகத்திற்கு முன்னுரிமை வழங்கி கொண்டாட, தீவனத் தொட்டியில் பிறந்த இறை மகனை வணங்கி தொழுதிடுமாறு எனது அன்பான கத்தோலிக்க மக்களிடம் கேட்டுக் கொள்வது அதனாலாகும். அனாவசியமான விடயங்கள் மற்றும் வெளிவாரியான விழாக்களின் மகிழ்ச்சிக்கு இடம் கொடுக்காமல் சுகாதார அறிவுறுத்தல்களை நேர்த்தியாக கடைப்பிடித்து கிறிஸ்து பிறப்பு விழா வழிபாட்டில் எளிமையான முறையில் பங்குபெற உங்களால் இயலும். இந்த கோவிட்-19 சர்வதேச பரவலினால் ஆதரவற்று இருக்கும் அனைவருக்காகவும் செபித்து அன்று இறை பாலன் மற்றும் வளர்ப்புத் தந்தை யோசேப்புடன் தீவனத் தொட்டியின் அருகில் அன்னை மரியாளிடம் மன்றாட உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. கத்தோலிக்க பக்தர்களாக இம்முறை நத்தாரை அர்த்தமுள்ள முறையில் கொண்டாடும் பொருட்டு கோவிட் -19 சர்வதேச பரவல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் வாழும் நீங்கள் அனைவரும் கீழே தரப்பட்டுள்ள விடயங்களில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. கிறிஸ்து பிறப்பு விழா வெளிவாரியான விழாவன்று, இவ்விழாவை ஆன்மீக அனுபவமாக மாற்றிக் கொள்ளுங்கள். இதற்காக
   - ✤ நல்லதொரு ஒப்புரவு அருளடையாளத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.
   - ✤ அதற்கு முன்னர் பாவ மன்னிப்பு வழிபாடு வழியாக ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்.
   - ✤ ஒப்புரவு அருளடையாளத்தை மக்களுக்கு பெற்றுத்தர பங்குத் தந்தையர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.
   - ✤ நத்தார் நள்ளிரவு திருப்பலி மற்றும் நத்தார் தின வழிபாடுகளை சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டலின் கீழ் ஒழுங்கு செய்யுங்கள்.
   - ✤ தொலைக்காட்சியினூடாக நேரலையாக ஒளிபரப்புச் செய்யப்படும் நத்தார் நள்ளிரவு திருப்பலிகள்.

- ✦ தேசிய தொலைக்காட்சியினூடாக சிங்கள மொழியில் திருப்பலி கந்தானை புனித செபஸ்தியார் ஆலயத்தில் இருந்து பேராயரின் தலைமையில் நடைபெறும்.
- ✦ தெரன தொலைக்காட்சியினூடாக சிங்கள மொழியில் திருப்பலி கிம்புலாபிட்டி புனித மரியாள் ஆலயத்தில் இருந்து துணை ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.
- ✦ சிரச தொலைக்காட்சியினூடாக சிங்கள மொழியில் திருப்பலி மொரட்டுவை புனித செபஸ்தியார் ஆலயத்தில் இருந்து துணை ஆயர் மேதகு ஜெ.டி. அந்தனி ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.
- ✦ சக்தி தொலைக்காட்சியினூடாக தமிழ் மொழியில் திருப்பலி நீர்கொழும்பு புனித சில்வெஸ்டர் ஆலயத்தில் இருந்து துணை ஆயர் மேதகு பி. அன்ரன் றஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.
- ✦ வெர்பும் தொலைக்காட்சியினூடாக ஆங்கில மொழியில் திருப்பலி பொரளை சகல புனிதர்கள் ஆலயத்தில் இருந்து அப்போஸ்தலிக்க தூதுவர் அதிமேதகு பிரையன் உடைக்வே ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.

2. கிறிஸ்து பிறப்பு தின திருப்பலிக்கு அந்தந்த பிரதேசங்களின் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களின் கீழ் பங்குத் தந்தையர்களால் ஏற்பாடு செய்யப்படும்.
3. வெளிவாரியான விழாக்களுக்காக பணத்தை செலவு செய்யாமல், கூட்டு பரிசளிப்பு விழாக்கள், கச்சேரிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்யாமல் செலவுகளை குறைத்து இம்முறை கத்தாரில் பாதிக்கப்பட்டோருக்காக செபிக்கவும், தனிமைப்படுத்தல் செயல் திட்டத்தின் கீழ் மூடப்பட்டுள்ள பிரதேசங்கள் அல்லது முதியோர் மடங்கள், சிறுவர் இல்லங்கள் அல்லது வேறு நிறுவனங்களில் வாழ்பவர்களுக்கு பொருள் உதவி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதன்போது நாளாந்தம் தொழிலுக்குச் சென்று தங்கள் குடும்பத்தை பராமரிப்பவர்கள் மீது விசேடமாக கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாகும். கிறிஸ்து பிறப்பு விழா தினத்தன்று அவ்வாறான குடும்பங்களை தேடிப் பார்த்து தேவைப்படுவோருக்கு உலர் உணவு பொருட்களை நத்தாரையொட்டி பகிர்ந்தளிக்குமாறு நான் அனைத்து பங்குத் தந்தையர்களையும் ஊக்குவிக்க விரும்புகின்றேன்.
4. இம்முறை நத்தாரின்போது வெளிப்படையான அலங்காரங்கள், அலங்காரங்கள் மற்றும் விழாக்கள் ஆகியவற்றிக்காக செலவு செய்ய இருக்கும் பணத்தை தனிமைப்படுத்தல் காரணத்தால் மூடப்பட்டிருக்கும் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு சலுகைகள், உலர் உணவு பொருட்கள் வழங்குவதில் கவனம் செலுத்துமாறு நான் இலங்கை அரசிடம் கேட்டுக் கொள்கின்றேன்.
5. குடும்பமாக கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாட நான் உங்களை ஊக்கப்படுத்துகின்றேன். பசியால் வாடும் உங்கள் அயல் குடும்பங்களை மறக்காமல் இந்த விழாவை கொண்டாட கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
6. தனிமைப்படுத்தி இருக்கும் பிரதேசங்களில் நத்தாரை முன்னிட்டு உணவுப் பொதிகள் வழங்கும் செயற்திட்டம் ஒன்றை செத் சரண நிறுவனம் ஆரம்பித்துள்ளது. அதற்கு நேரடியாக உலர் உணவுப் பொருட்களை வழங்க விரும்புவோர் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உள்ள செத் சரண நிறுவனத்திடம் அவற்றை கையளிக்கலாம். மேலதிக விபரங்களுக்காக அருட்தந்தை லோரன்ஸ் ராமநாயக்க அவர்களை பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் 076-1404611 தொடர்புக் கொள்ளவும். பண உதவி செய்ய விரும்புவோர் கீழே தரப்பட்டுள்ள வங்கி கணக்கிற்கு நன்கொடைகளை அனுப்புவதன் வழியாக இதற்கு ஒத்துழைப்பு வழங்கலாம். இந்த வங்கி கணக்கின் விபரங்கள் பின்வருமாறு :

**வங்கி கணக்கின் பெயர் :**
செத் சரண நிறுவனம் கொழும்பு.

**வங்கி :** கொமர்ஷல் வங்கி, பொரல்லை கிளை

**வங்கி கணக்கின் இலக்கம் :** 1000324998

**ஸ்விஃப்ட் குறியீடு : CCEYLKLX**

**மகிழ்ச்சிகரமான கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துக்கள்**

எனது அன்பான சகோதர சகோதரிகளே, கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தமுள்ள வகையில் கொண்டாட அதாவது உள்ளார்ந்த மன மாற்றத்தின் வழியாக இறைவனை நெருங்கி பெத்லகேமில் பிறந்த இறை பாலனை எம் இதயத்தில் ஏற்றுக் கொள்ள ஏழைகளிடம் அனுதாபத்துடன் செயற்பட்டால், விழா, விருந்து மற்றும் விரும்பும் உரையாடல்கள் வழியாக கிடைக்கும் மகிழ்ச்சி தற்காலிகமான மகிழ்ச்சியை விட நிறைவான மகிழ்ச்சியால் எம் மனங்களை நிரப்பிட முடியும். இம்முறை கிறிஸ்து பிறப்பு விழாவில் நிறைவான மகிழ்ச்சியை தேடிக்கொள்ள தேவைப்படுவது ஆணவமற்ற ஆன்மீக தேடலாகும். அந்த மகிழ்ச்சியை நாம் சந்திப்பது, பெற்றுக்கொள்வதை விட தன்னிடம் இருப்பதை கொடுக்கவும், அன்பை பெறுவதைப் பார்க்கிலும் அயலவர்களுக்கு அன்பு செலுத்துவதும், சேர்த்து வைப்பதை விட பகிர்ந்துக் கொள்ளவும், சந்தேகப்படுவதை விட நம்பிக்கை கொள்ளவும் முயற்சிப்பதாகும்.

**உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி நிறைந்த இனிய கிறிஸ்து பிறப்பு திருவிழா உரித்தாகட்டும் என மனதார வாழ்த்துகிறேன்.**

**✠ மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்**




அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்